812 d. No. M. 2797. (விலை அணு ஒன்று.)



VARTHAGA OOLIAN.

Trichinopoly. | Monthly Journal of Commerce, Trade and Industry. | May 1934

மலர் 2.] திருச்சினப்பள்ளி மே-மீ -1934 [இதழ் 23

"வர்த்தக ஊழியன்" வருட சந்தா.
உள்நாட்டிற்கு ரூ. 1. வெளி நாட்டிற்கு ரூ. 1—8—0

விளம்பர விகிதம்.
அங்குலம் ஒன்றுக்கு ரூ. 0—8—0.
பக்கம் ஒன்றுக்கு ரூ. 10—0—0.
அரை பக்கத்திற்கு ரூ. 6. ராப்பர் பக்கத்திற்கு ரூ. 25.
முன்பணமில்லாத விளம்பரங்கள் பிரசுரிக்க முடியாது. மேற்கால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதவும்.

ஆசிரியர்—திரு. டி. வி. கே. நாயுடு.

அட்டவணை.

நெருப்புபெட்டிக்கு வரி ...	263
சிறுமணித்திரள் ...	264
மதிப்புரைகள் ...	265
உலக வர்த்தகம் ...	268
இந்திய வர்த்தகம் ...	269
மார்க்கட்டின் நிலவரம் ...	270
ராஜம் (கதை) ...	271
இந்திய வர்த்தக சங்க மகாநாடு ...	275
கடலை வர்த்தகத்துக்கு ஆபத்து ...	276
உலக விநோதங்கள் ...	278
Mysore Page ...	280
Trade Secrets ...	282
Legal Page ...	284
சாமான்களுக்கு ரயில்வே சார்ஜ்கள் ...	287
இலங்கை பக்கம் ...	288

OFFICE OF THE REGISTRAR 15 MAY 1934 MADRAS

"VARTHAGA OOLIAN"
Annual Subscription.
Inland Rs. 1—0—0. Foreign Rs. 1—8—0.

Advertisement Tariff Per Insertion.
One inch Rs. 0—8—0. One Page Rs. 10—0—0
Half Page Rs. 6—0—0. Wrapper Page Rs. 25

Advertisement without prepayment will not be considered. For further particulars write to the Manager.

HULLO! HULLO!!
HOW IS YOUR BUSINESS?
DON'T BE BROKEN HEARTED.
BROAD CAST YOUR BUSINESS.
MESSAGES THROUGH
"VARTHAGA OOLIAN"
AND PROSPER IN TRADE

Apply to:—

Manager, "Varthaga Oolian"
TRICHINOPOLY, SOUTH INDIA.

T.R. ரெங்கசாமிநாயுடு

வர்ணம் & கண்ணாடி வியாபாரம்,

341, 42, பெரியகடைவீதி, திருச்சினாப்பள்ளி.

எம்மிடம் பிரசித்திபெற்ற கம்பெனிகளின் நேர்த்தியான வார்னீஷ் வர்ணங்கள், முகம் பார்க்கும் நிலைக்கண்ணாடிகள், ஜன்னல் கண்ணாடிகள், கலர் கண்ணாடிகள்.

ராஜா ரவிவர்மாவின் அழகிய சித்திரப்படங்கள், ஜெர்மன் & இங்கிலீஷ் லேடி & சீனரி படங்கள், போஸ்டு கார்டு படங்கள், படங்களுக்கு வேண்டிய சட்டம் கண்ணாடிகள் கால் அங்குல வெளிச்ச கண்ணாடிகள் அட்டை, டின் பிளேட் வகைகள்.

திருவிழாக்களுக்கு வேண்டிய கலர் காகிதங்கள், வர்த்தி தகடுகள், கண்ணாடி மணி தினுசுகள், அசல் தங்கம் & வெள்ளி ரேக்குகள் முதலியவைகள் விலை சரசமாயும் நயமானதாயும் கிடைக்கும்.

ஒருமுறை ஆர்டர் கொடுத்து பாருங்கள்.

இனாம்! இனாம்!!

என் அனுபவ சாஸ்திரீய

தேகாப்பியாச முறை

இது எல்லோருக்கும் இனாமாக அளிக்கப்படும்.

இப்புத்தகத்தில் தேகாப்பியாச முறையைப்பற்றி நன்முக விவரித்து எழுதப்பட்டிருக்கின்றது. இது தவிர என்னுடையதும் மற்றும் என்னுடைய சிஷ்யர்களுடையதுமான அநேக புகைப்படங்கள் தெளிவாக அச்சிடப்பட்டிருக்கின்றன. எவன் தன் தேகத்தை அபிவிருத்தி செய்து ஆரோக்கியமாக இருக்க விரும்புகிறானோ அவன் இப்புத்தகத்தை வாசிக்க வேண்டும்.

தபால் சார்ஜுக்காக இரண்டு அணா இந்திய போஸ்டல் ஸ்டாம்பு அனுப்பவும்.

பிரபோசர்: **எம். வி. கிருஷ்ண ராவ்,**

உதகமண்டலம், (நீலகிரி.)

MADRAS

சந்தாதார்களுக்கு அறிவிப்பு.

“வர்த்தக ஊழியன்” வளர்ச்சியுற விரும்பினால் இன்றே உங்கள் சந்தாவை அனுப்பி வையுங்கள். மானேஜர்.

‘நாணயம் நனி பேண்’

“வர்த்தக ஊழியன்”

திருச்சினாப்பள்ளி
1934-௵ மே-மீ

நெருப்புப் பெட்டிக்கு வரி.

(Matches Excise Duty.)

பொதுவாகவே ஜனங்களுக்கு முக்கியமாக வேண்டிய சாமான்களில் நெருப்புப் பெட்டியும் ஒன்று. ஜனங்களுக்கு உப்பு எவ்வளவு இன்றியமையாததோ அதேபோல்நெருப்புப்பெட்டியும். சர்க்கரை யில்லாமல் ஜனங்கள் சாப்பிடலாம். ஆனால் உப்பில்லாமல் ஜனங்கள் ஜீவிக்க முடியாது. அம்மாதிரியே நெருப்புப் பெட்டி இல்லாமல் வீட்டில் நிர்வாகம் செய்யமுடியாது. முற்காலத்தில் சக்கி முக்கி கல்களால் நெருப்பை உண்டாக்கிக் கொண்டிருந்தார்கள். மேல்நாட்டார் நமது நாட்டுக்கு அனுப்ப ஆரம்பித்த சாமான்களில் நெருப்புப் பெட்டியும் ஒன்று. நெருப்புப் பெட்டிகள் அடக்கமாகவும் சவுகர்யமாகவும் இருந்ததின்மேல் எல்லோரும் உபயோகிக்க ஆரம்பித்தார்கள். இப்பொழுது எலக்டிரிக் விளக்குகள் அபரிமிதமாக வீடுகளில் ஜொலித்துக் கொண்டிருந்த போதிலும், நெருப்புப் பெட்டிகளையும் வைத்துக்கொண்டிருக்க வேண்டியதாயிருக்கிறது. அடுப்புகளை பற்றவைக்கவேண்டுமானால் எலக்டிரிக்குகளினால் தற்சமயம் முடியாது. ஆனபடியினால் வீடுகளுக்கு மிகவும் முக்யமானது நெருப்புப் பெட்டி தான் என்று சொல்வதில் ஆட்சேபனை யிருக்காது. இவ்விதம் சர்வ சாதாரணமாக பழகிவரும் நெருப்புப் பெட்டி மிகவும் மலிவாக விற்றதின் காரணமாக ஏழைமுதல் பணக்காரர் வரையில் வாங்கி உபயோகித்து வந்தார்கள். நெருப்புப் பெட்டிகளின் அவசியம் அதிகம் ஏற்பட்டதின் காரணமாக இந்தியாவில் பல பாகங்களில் நெருப்புப் பெட்டி செய்யும் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன. குடிசைத் தொழிலாகவும் நடைபெற்று வருகின்றன. எங்கு பார்த்தாலும், கிராமங்களிலும், தொழிற்சாலைகள் நிறுவப்பட்டிருக்கின்றன. இவ்விதம் எல்லோருக்கும் உபயோகமாகக் கூடியதாக யிருந்த நெருப்புப்பெட்டிக்கும் ஆபத்துஏற்பட்டுவிட்டது.கவர்ன்மெண்டார்நெருப்புப்பெட்டிக்கு வரிவிதிக்கப்போவதாக இந்திய சட்டசபையில் தெரியப் படுத்தியவுடன் சிலவர்த்தகர்கள்,ஏழைகளுக்கு தோழனாகயிருக்கும்நெருப்புப்பெட்டியின்விலையை உடனே உயர்த்தி அதிகலாபம் சம்பாதிக்க எண்ணங்கொண்டு கிராமங்களுக்கெல்லாம் சென்று, நெருப்புப்பெட்டிகளை வாங்கி, சேகரம் செய்துவிட்டார்கள். லாபம் சம்பாதிக்கஇதுதானாவழி. ஆனால் வர்த்தக சங்கங்கள் வாளாயிருக்கவில்லை. தங்களுடைய ஆக்ஷேபனைகளை கவர்ன்மெண்டாருக்கும் இந்திய சட்டசபை அங்கத்தினர்களுக்கும் தெரியபடுத்தினார்கள். அதிகமான சாதகம் ஏற்படாவிட்டாலும் கொஞ்சம் சாதகம் ஏற்பட்டது. புதிதாக விதிக்கப்போகும் வரி குறைக்கப்பட்டது. நெருப்புப் பெட்டியின்மீது விதிக்கும்வரியிலிருந்துகிடைக்கும் வருமானத்தை மாகாணங்களுக்கும் கவர்ன்மெண்டார் பிரித்து கொடுத்துஅவர்களுக்குஉதவ வேண்டுமென்றஎண்ணத்தினால் வரி விதித்திருப்பதாக கவர்ன்மெண்டு தரப்பில்சொல்லப்பட்டது. புதிய வரி விதிக்க கவர்ன்மெண்டார் எண்ணங் கொண்டிருந்ததை தெரிவித்தவுடன் இந்தியாவின் பல பாகங்களில் நிறுவப்பட்டிருக்கும் நெருப்புப்பெட்டி தொழிற்சாலைகள் மூடப்பட்டுவிட்டன. இதனால் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலை யில்லாமல் திண்டாடும்படி செய்துவிட்டது. 80 குச்சிகளுள்ள நெருப்புப்பெட்டிகள் குரோஸ்1-க்கு ரு. 2-4-0ம் அதற்கு அதிகப்பட்ட குச்சிகளுள்ள பெட்டிகளின் மேல் குரோஸ் ஒன்றுக்கு ஒவ்வொரு 20 குச்சிகளுக்கு 9 அணா வீதமும் வரி விதிக்கஉத்தேசிக்கப்பட்டிருந்தது. ஆனால் பெருங்கிளர்ச்சியின் காரணமாக 40 குச்சிகளுள்ள பெட்டிகளுக்கு குரோஸ் ஒன்றுக்கு ஒரு ரூபாயும், 60 குச்சிகளுக்கு ரு. 1—8—0, 80 குச்சிகளுக்கு ரு. 2 வரிவிதிக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. காப்புவரி சபையார்கள், நெருப்பு பெட்டியானது இந்தியாவில்குடிசைத்தொழிலாக உற்பத்திசெய்யப்படுவதால், அதற்கு எவ்விதமானவரியும்விதிக்கக்கூடாதென்று தெரிவித்திருந்தும், கவர்ன்மெண்டார் வரி விதிக்க யோசனை செய்தது வருந்தத்தக்கதாகும். எவ்விதமானாலும் வரியும் விதித்தாகிவிட்டது. குடிசைத் தொழிலாக நடத்தி வருபவர்கள் இனி என்ன செய்யப்போகின்றார்களென்றுகவனிக்கவேண்டும். வேலையில்லாமல் கஷ்டப்படும் தொழிலாளர்களின் நிலைமையை எவ்விதம் நிவர்த்திக்கப் போகின்றார்களோ தெரியவில்லை. இவ்வளவு கஷ்டங்களு மில்லாமல் தங்க ஏற்றுமதிக்கும், செயற்கை நெய்க்கும், மண் எண்ணெய் இறக்குமதிக்கும் வரி விதித்திருந்தால் கவர்ன்மெண்டார் எதிர்பார்த்த வருமானம் கிடைத்திருக்கும். இனிமேலாகிலும் கவர்ன்மெண்டார் நெருப்புப்பெட்டிக்கு விதித்த வரியை ரத்து செய்ய முயற்சிஎடுத்துக்கொண்டு, ஏழைகளுக்கு உதவி செய்ய முன்வருவார்களென்று நம்புகிறோம்.

சிறுமணித்திரள்.

(Editorial Notes.)

வர்த்தக சங்கங்கள் மகாநாடு

இந்திய வர்த்தகசங்கங்கள் மகாநாடு இவ்வருடம் டெல்லியில் நடைபெற்றது. இம்மகாநாட்டில் நிறைவேறின முக்கிய தீர்மானங்கள் மற்றோரிடத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. பிரதிநிதிகள் வர்த்தக முன்னேற்றத்திற்கான வழிகளை தீர ஆலோசித்து தீர்மானங்கள் செய்திருப்பதை நாம் பாராட்டுகிறோம். கவர்ன்மெண்டாரும் இந்திய வர்த்தகர்களின் அபிப்பிராயங்களுக்கு மதிப்பு கொடுப்பார்களென்று நம்புகிறோம்.

சர்க்கரைக்கு வரி

இந்திய கவர்ன்மெண்டார் வரிகளை உயர்த்தி வர்த்தகர்களுக்கும், பொதுஜனங்களுக்கும் கஷ்டத்தை கொடுப்பதில் தீவிரமாக முயற்சி எடுத்துக் கொள்கிறார்களேயன்றி ஏழை பங்காளியாகயிருக்க அவர்களுக்கு மனம் வருவதில்லை. கவர்ன்மெண்டார் வருமானத்தை உத்தேசித்து 1930ல் ரூ. 4—8—0 வரி விதித்தார்கள். 1931ல் 6 ரூபாய்க்கு உயர்த்தினார்கள். பிறகு 7—4—0ம் 25—சதம் சர்சார்ஜு விதிக்கப்பட்டது. 1931ம் வருடம் மார்ச்சு மாதத்தில் ரூ. 9-1-0 ஆகயிருந்தது. இந்தியாவில் சர்க்கரைதொழிலை அபிவிருத்திசெய்ய வேண்டுமென்று பலர் பணம் போட்டு தொழில்செய்ய ஆரம்பித்தனர். அதன் காரணமாக சுமார் 75-ஆலைகள் புதிதாக ஏற்பட்டன. ஜர்மன், பிரான்சு, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா முதலிய தேசங்களில் சர்க்கரைக்கு எதிர் வரி கிடையாது. இப்பொழுது எதிர் வரி விதிக்க தீர்மானித்துவிட்டபடியால் சர்க்கரை தொழிலுக்கு இனிமேல் துணிந்து பணத்தை போடமாட்டார்களென்று நம்புகிறோம். சர்க்கரை தொழிற்சாலைகள் அபிவிருத்தி அடையவேண்டுமானால் தொழிற்சாலையில் முதல் வருடத்தில் உற்பத்தியாகும் சர்க்கரைக்கு வரி போடக்கூடாது. புதிதாக ஏற்படுத்தப்போகும் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் சர்க்கரைக்கு முதல் மூன்று வருடங்களுக்கு வரி விதிக்கக் கூடாது. சர்க்கரைக்கு இறக்குமதி வரியை உயர்த்தவேண்டும். இவைகளை கவர்ன்மெண்டார் ஏற்று நடந்துகொண்டால் சர்க்கரை அபிவிருத்தியை சிறிதேனும் எதிர்பார்க்கலாம்.

இங்கும் அங்கும்

சிலகாலமாக பொருளாதார கஷ்டம் ஏற்பட்டு தேசங்கள் மிகவும் கவலைப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அவைகளைநீக்குவதற்கு சிலதேசங்கள் பலவேறு வழிகளை யோசித்து வருகின்றன. சாமான்களின் விலைகளை உயர்த்துவதுதான் சிறந்த மார்க்கமென்று அமெரிக்க கவர்ன்மெண்டார் கருதி அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார்கள். இத்தாலி தேசத்தில் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களின் சம்பளத்தைக் குறைத்ததோடும் வீட்டு வாடகையையும் குறைத்து விட்டார்கள். இந்தியாவிலோ கவர்ன்மெண்டார் மேல்நாட்டு வர்த்தகர்களுக்கு சௌகரியம் செய்தும், வரிகளை உயர்த்தியும் வருகின்றார்கள். சென்ற இரண்டரை வருஷகாலத்திற்குள்ளாக 179 கோடிரூபாய் மதிப்புள்ள தங்கம் இந்தியாவைவிட்டு போய்விட்டது. கவர்ன்மெண்டார் இதை தடுக்க யாதொரு நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை. இவ்விதமே தங்கம் போய்க்கொண்டிருந்தால் "வசந்த விகடன்" தெரிவித்ததுபோல்கல்யாணகாலத்தில் தங்கத் தாலிக்கு பதிலாக மரத்தாலி கட்டும்படி நேரிட்டாலும்நேரிடும். இனியாகிலும்கவர்ன்மெண்டார் பொருளாதார நிலைமையை நீக்க முன்வருவார்களா?

ஆலை தொழிலுக்கு பாதுகாப்பு

இந்திய நெசவுத் தொழிலுக்கு இதுகாறும் பாதுகாப்பு அளித்து வந்தகெடு முடிந்துவிட்டதின்மேல் காப்புவரி சபையினரின் சிபார்சுகளை அனுசரித்து மீண்டும் 5-வருடங்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்ற சட்டம் இந்திய சட்டசபையில் நிறைவேற்றப்பட்டது. தேசத்திற்கு மிக முக்கியமான சட்டங்கள் இராக்காலங்களில் அவசரம் அவசரமாக நிறைவேறுகின்றன. ஏற்கனவே இந்த பாதுகாப்பு சட்டத்தினால் போதுமானநன்மைஏற்படவில்லையென்று தெரிவித்திருந்தும் மீண்டும் 5வருடங்களுக்கு நீடித்திருப்பதினால் இனிமேலாகிலும் ஆலை தொழிலுக்கு உண்மையாகவே பாதுகாப்பு அளிக்கப்படுமாயென்று கவனிக்கவேண்டும்

நிலகடலைக்கும் ஆபத்து

ஹைதராபாத் சமஸ்தானத்தில் நிலக்கடலை அபரிமிதமாக பயிரிடப்படுவதாயும் அதன் காரணமாக சென்னை மாகாணத்தின் கடலை எண்ணை கைத்தொழில் சின்னாபின்னமாகப் போய்விடுமென்றும் தென்னாற்காடு ஜில்லா எண்ணெய் வர்த்தகர்கள் இந்தியா கவர்ன்மெண்டுக்கு மகஜர் அனுப்பியுள்ளார்கள். இதன் விபரம் மற்றோரிடத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. கவர்ன்மெண்டார் இந்த தொழிலுக்கு பாதுகாப்பு அளிக்காவிட்டால் சென்னை மாகாணத்தில் கடலை எண்ணெய் கைத்தொழில் சீர்கேடடையும். ஆகையினால் இதற்கு வேண்டிய பரிகாரங்களை கவர்ன்மெண்டார் உடனே செய்வார்களென்று நம்புகிறோம்.

குறைந்த செலவில்
நிறைந்த லாபம் பெற விரும்பினால்
வர்த்தக ஊழியனில்
விளம்பரம் செய்யுங்கள்.

MADRAS

மதிப்புரைகள்

(Reviews.)

Value of Religion.

We acknowledge receipt of a copy of the paper on "Value of Religion" by R. V. Shah, Ahmedabad. sent for reading at the Inter-National Religious Conference 2nd session held at Bangalore City last month.

Madan's Formula Book.

The book "Madan's Formula Book", a copy was received by us, contains number of recipes and excellent formulas for the manufacture of soaps, scented oils, & many other toilet preparations. This book will be a guide to the beginners in trade to earn more profit in their business. It is priced Rs. 1-8-0 & can be had from the Paradise Perfumery House, 75 Colootola, Calcutta.

தமிழ் அன்பர் மகாநாடு

சென்னை பச்சையப்பன் கலாசாலையில் 1933-ம் வருடம் டிசம்பர் மாதம் 21வ முதல் 26வ வரையில் அமைந்திருந்த தமிழ் புத்தக காட்சி சாலையைப்பற்றியும். அதே காலத்தில் நடைபெற்ற தமிழ் அன்பர் மகாநாட்டைப்பற்றியும், மிக விரிவாக எழுதி படங்களுடன் புஸ்தக ரூபமாக அச்சிட்டு தமிழ் அன்பர் மகாநாடு ஆபீசிலிருந்து வெளியிட்டிருக்கும் பிரதியொன்று நமது பார்வைக்கு அனுப்பியுள்ளார்கள். தமிழ் அன்பர் மகாநாட்டுக்கு விஜயம் செய்யாதவர்களுக்கும், மற்றுமுள்ள தமிழ் அபிமானிகளுக்கும், இப்புஸ்தகம் அத்யாவசியமானது.

இந்தியன் கலோனியல்
கார்ப்பொரேஷன் லிமிடேட்

பற்பல தேசங்களுக்குச்சென்று உழைத்துவரும் நம்நாட்டு ஜனங்களின் நிலைமையை பலவழிகளில் சீர்திருத்தம் செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் இந்தியன் கலோனியல் கார்பொரேஷன் லிமிடெட் என்றகம்பெனியை சென்னையில் ஸ்தாபிக்கப் போவதாயும் அதற்கு பங்கு ஒன்றுக்கு 10 ரூபாய் வீதம் 2,000-பங்குகளாலாகிய 20,000-ரூபாய் மூலதனம் சேர்த்து ஆரம்பிக்க தற்சமயம் இந்தியன் கலோனியல் ரிவ்யூ பத்திரிகையை நடத்திவரும் திரு. டி. கே. சுவாமிநாதன் மானேஜிங் டைரக்டராக நியமிக்கப்பட்டிருப்பதாயும் அறிகிறோம் கம்பெனியின் நோக்கங்கள் நன்மையைக் கொடுக்குமென்று தெரிகிறபடியினல் பொதுஜனங்கள் ஆதரிப்பார்களென்று நம்புகிறோம்.

ஓரியண்டல் கவர்ன்மெண்ட
ஸெக்யூரிடி லைப் அஷ்யூரன்ஸ்
கம்பெனி லிமிடெட்.

இந்த பிரபல இந்திய இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி இவ்வருஷம் மே மாதம் 5வ நடத்தும் 60ம் வருட பூர்த்தியாகிற டைமண்ட் ஜுபிலி இந்திய மக்கள் அனைவரும்கொண்டாடத் தக்க ஒரு சம்பவமாகும். நமது தேசத்தில் ஸ்தாபிக்கப்பட்ட இந்திய கம்பெனிகளில் சிலதே ஜுபிலி கொண்டாட்டம் வரையில் இருந்து வருகின்றன அம்மாதிரி 60 வருஷம் உழைத்து உன்னத ஸ்திதியை அடைந்துள்ளது ஓரியண்டல் கம்பெனியின் பெருமையைக் காட்டுகிறது.

1874-ம் வருஷத்தில் பம்பாயிலுள்ள பிரபல இந்திய வியாபாரிகளால் ஸ்தாபிக்கப்பட்டு இக் கம்பெனி சென்ற 60 வருஷ காலமாக விசேஷ அபிவிருத்தி யடைந்து வருகிறது. இதனுடைய மூலதனம் சுமார் 15 கோடி ரூபாய். கம்பெனியில் எடுத்துக் கொள்ளப்பட்ட பாலிஸிகளின் தொகை ரூ. 48 கோடி. வருஷ வருமானம் சுமார் $3\frac{1}{2}$ கோடி ரூபாய் இதுவரையில் பாலிஸிதார்களுக்கும் அவர்களுடைய வார்சுகளுக்கும் சுமார் 15 கோடி ரூபாய் செலுத்தியிருக்கிறது. இந்தியா தேசம் முழுவதுமுள்ள இன்ஷ்யூரன்ஸில் மூன்றில் ஒரு பங்கு ஓரியண்டல் கம்பெனியுடையதாகும். தேசமெங்கும் இக் கம்பெனிக்கு 5,000 ஏஜண்டுகளிருகின்றனர். அவர்களுக்குச் செலுத்தும் கமிஷன் சுமார் ரூ. 18லட்சம்.

இப் பிரபல கம்பெனியை நடத்தும் மானேஜர் H. E. ஜோன்ஸ் அவர்கள் இன்ஷ்யூரன்ஸ் உலகில் திறமையும் கீர்த்தியும் வாய்ந்தவர். இப்பெரிய கம்பெனியைப்பற்றிப் பொதுவாக எழுதின போதிலும், இதனுடைய திருச்சினப்பள்ளி கிளை ஆபீஸினுடைய விசேஷ அபிவிருத்தி மிகவும் பாராட்டத் தக்கதாகும். 1926-வருடத்தில் இன்ஸ்பெக்டர் ஆபீஸாக ஸ்தாபிக்கப்பட்டு இரண்டு வருஷத்திற்கெல்லாம் சப் பிராஞ்சாகமாறி அடுத்த 1929-ம் வருடத்தில் பிராஞ்சாக ஸ்தாபிக்கப்பட்டது. மூன்றுவருஷ காலத்தில் சுமார் நான்கு மடங்கு அபிவிருத்தி யடைந்து, பிறகு சென்ற 3-வருஷ காலத்திற்குள் இன்னும் விசேஷமாகவிருத்தியாகியிருக்கிறது. சுமார் 8-வருஷகாலத்தில் தென் ஜில்லாக்களில் இக் கம்பெனியை பிரபலப்படுத்தி முன்னுக்கு கொண்டுவந்ததற்கு திரு S. M. கிருஷ்ணஸ்வாமி அவர்களின் திறமையும் உழைப்பும் பாராட்டத்தக்கன.

டைமண்ட் ஜுபிலி விழா சமயத்தில் எங்களுக் கேற்பட்ட மகிழ்ச்சியை கம்பெனிக்குத் தெரிவித்துக்கொள்வது மல்லாமல், கம்பெனி மென்மேலும் விசேஷ அபிவிருத்தியடைய வேண்டுமென்று எல்லாம் வல்ல ஈசனை பிரார்த்திக்கின்றோம்.

அனுபோக இலகு வைத்தியம்

டாக்டர் கே. எ. தருமலிங்க முதலியாரவர்களிடமிருந்து அனுபோக இலகு வைத்தியம் (முதற் பாகம்) என்ற புத்தகம் வரப்பெற்றோம். அதிக வருமான மில்லாமல் கஷ்டப்படும் பொது ஜனங்கள் தாங்களாகவே நோய்களுக்கு சிகிச்சை செய்துகொள்ள ஒவ்

வொரு நோய்க்கும் மருந்துவகைகள் எழுதப்பட்டிருக்கின்றன. 112-உயர்ந்த முறைகள் அடங்கியுள்ளன. குருமுருக வைத்ய ஆஸ்ரமத்தில் தயாரிக்கப்பட்டுள்ள மருந்துவகைகளின் ஜாபிதாவும் சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்த புஸ்தகததின் விலை அணா 2.

சென்னை, சிந்தாதிரிபேட்டை, 11ப் அய்யாமுதலிவீதி, குருமுருக வைத்திய ஆஸ்ரமத்தில் இப்புஸ்தகம் கிடைக்கும்.

பன்னிரு திருமுறைத்திரட்டு.

தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருமந்திரம் முதலிய திருவருட்பாக்களிலிருந்து மனதை உருகச்செய்ய வல்லனவாயுள்ள 168 திருப்பாசுரங்களை ஒருங்கே திரட்டி அரும்பத உரையுடன் வெளியிடப்பட்டுள்ள "பன்னிரு திருமுறைத்திரட்டு" என்ற புஸ்தகத்தின் பிரதியொன்று நமது பார்வைக்கு அனுப்பியுள்ளார்கள். இப்புஸ்தகத்தை வாங்கி தினம் பக்தியுடன் பாராயணம் செய்துவந்தால் சிவபெருமானுடைய திருவருள் அவசியம் சித்திக்குமென்பது எமது கருத்து. சென்னை திருவல்லிக்கேணி, பார்த்தசாரதி நாயுடு தெரு, 22 நெ. இலக்கமிட்ட ஞானசம்பந்த நிலையத்தில் இப்புஸ்தகம் இரண்டு அணாவுக்கு கிடைக்கும்.

திருக்குறட்சாரம்.

திருவள்ளுவர் அருளிச்செய்த "திருக்குறள்" என்னும் புஸ்தகத்தில் பல அரிய விஷயங்களிருந்தும் அவற்றை முற்றிலும் படிக்க அவகாசமில்லாமல் பலர் அவதிப்படுவதை நீக்க அறத்துப்பாலிலும், பொருட்பாலிலும் உள்ள 108 அதிகாரங்களிலிருந்தும் ஒவ்வோரதிகாரத்திற்கு ஒவ்வொரு குறட்பாவாக 108 குறட்பாக்களைத் தேர்ந்தெடுத்து அவற்றுடன் அவ்வவ்வதிகாரங்களிலுள்ள மற்றக் குறட்பாக்களின் சாரத்தையும் சேர்த்து சுலபமாகஅருத்தமாகக் கூடிய நடையில் "திருக்குறட்சாரம்" என்ற புஸ்தகம் எழுதப்பட்டிருக்கிறது. மாணவச் சிறுவர்களுக்கென்றே எழுதப்பட்டதாதலால் இதில் காமத்துப்பால் சேர்க்கவில்லை. நல்ல நடையிற்செவ்வனே விளக்கி உரியஇடங்களில் சிறந்த கருத்துக்களை பிரமாணங்களாக காட்டியிருப்பது ஆசிரியரின் திறமையைக் காட்டுகிறது. இப்புஸ்தகத்தின் விலை அணா பத்து. சென்னை திருவல்லிக்கேணி பார்த்தசாரதி நாயுடு தெரு 22 நெ. இல்லத்திலிருக்கும் ஆசிரியர் திரு. டி. எஸ். பரமசிவன் பிள்ளையவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ஆசார ஒழுக்கமுறை.

திருநெல்வேலி பரமசிவன் பிள்ளை அவர்களால் எழுதிய "ஆசார ஒழுக்கமுறை" கிடைக்கப்பெற்றோம். இப்புஸ்தகத்தில் ஒவ்வொருவரும் இன்னது செய்வது இன்னது தவிர்வது என்பவைகளைப் பற்றியும் நித்யகருமானுட்டானம் சிவாலயதரிசனம் திருமுறைப்பாராயண விதி முதலானவைகளைப்பற்றியும் வெகு தெளிவாகவும், விரிவாகவும் எழுதியிருப்பதுடன் சைவ நூற்களிலிருந்து மேற்கோள் காட்டியிருப்பது மிகவும் பொருத்தமாகயிருக்கிறது. பல நூல்களைப் படித்து அறிதற்குரியவிஷயஙகள்இதில் ஒருங்கே சுருக்கமாக அமைந்திருத்தலால் சைவ சமயிகளுக்கு இன்றியமையாத நூலாகும் இப்புஸ்தகத்தை கவர்ன்மெண்டார் அங்கீகரித்திருப்பதால் பள்ளிக்கூடங்களில் பாடபுஸ்தகமாகவும் வைக்க சாதகமாயிருக்கும். இப்புஸ்தகத்தின் விலை அணா நான்கு. சென்னை, திருவல்லிக்கேணி 22 நெ. பார்த்தசாரதி நாயுடு தெரு ஞானசம்பந்த நிலையத்தில் கிடைக்கும்.

சிவார்ச்சனைத் திருமந்திரம்.

நமது தேசத்தில் மெல்லெனப்புகுந்து நாளுக்கு நாள் ஓங்கிவளர்ந்து உலாவித்திரிகின்ற பிறதேசபோலி நாகரிக மாய நோயினால் நமது சைவ மக்களிற்பலர் அநியாயமாய்ப் பீடிக்கப்பட்டு சமய கொள்கைகளையும், சாத்திரங்களையும் ஓதியுணராமல் அவதிப்படுவதை நீக்க வேண்டுமென்ற அவா மேலீட்டினால் எளிதில் பொருள் விளங்கக்கூடியவையாயும் ஒவ்வொருவரும் அவசியம் ஓதியுணரவேண்டிய பொருள்களையுடையனவாயும் 1008 திருப்பாசுரங்களைத் திரட்டியும் அரும்பதவிளக்கத்துடன் சென்னை ராயபேட்டை ஸ்ரீ பால சுப்பிரமணிய நிலையத்தின் நிர்வாகிகளால் அச்சிட்டு வெளியிடப்பட்ட சிவார்ச்சனைத் திருமந்திரம் என்னும் புஸ்தகம் வரப்பெற்றோம். ஒவ்வொரு சைவர்களும் தங்கள் குடும்ப பொக்கிஷமாக கருதி இப்புஸ்தகத்தை உபயோகிக்கவேணடும். விலை அணா ஒன்று. கிடைக்குமிடம்:-

திரு. பரமசிவன் பிள்ளை,
22, பார்த்தசாரதி நாயுடு தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை.

வர்த்தக ஊழியனைப்பற்றி

திருச்சினாப்பள்ளியிலிருந்து ஸ்ரீமான். டி. வி. கே. நாயுடுவினால் இயற்றப்பட்டுவரும் "வர்த்தக ஊழியன்" எனும் மாதப்பத்திரிகையின் மார்ச்சுமாத இதழ் கிடைத்திருக்கிறது. இதனில் தேங்காய் வர்த்தகம் என்பதுபற்றித் தலையங்கம் எழுதப்பட்டிருக்கிறது அதனில் இலங்கையில் தேங்காய் விற்பனை பதிகரிப்பிற்குச் செய்யப்படும் முயற்சிகள் எடுத்துக் கூறப்பட்டிருப்பதுடன், இந்நாட்டுப் போட்டியைத்தடுக்க இந்தியச் சர்க்கார் முன்னெச்சரிக்கையாகவிருக்கவேண்டுமென்றும், எழுதப்பட்டிருக்கிறது. வேறு பல தொழில் வர்த்தகச் சம்பந்தமான விவரங்களும், சமூகச்சீர்திருத்தக் கதையொன்றின் தொடர்ச்சியும் காணப்படுகின்றன. இதனில் ஆங்கிலத்திலும் குறிப்புகளும் வியாசங்களும் எழுதப்பட்டிருக்கின்றன. (தினகரன்.)

பத்திரிகைகள் வரவு.
(Publications Received)

London Chamber of Commerce
Indian Mirror (Journal
Indian Finance
Industry
Commercial Tit Bits of India
Indo-Malaya Review
Mysore Chamber of Commerce
Guardian (Bullettin
Light of Asia
Railway Herald
அமிர்த குணபோதினி
ஆனந்தபோதினி
ஆர்ய தர்மம்
இந்தியா
இந்திய விவசயம்
ஈழகேசரி
களிராட்டை
குமரன்
குறும்பன்
குமாரவிகடன்
செங்குந்த மித்திரன்
தமிழ்நாடு
தினகரன்
திருவாங்கூர் அபிமானி
தேசநேசன்
தொண்டுசெல்வம்
நகரதூதன்
பாரதஜோதி
புரட்சி
வசந்தவிகடன்
வம்பன்
விநோதன்
விநோதநேசன்
விஸ்வபந்து
விசித்திரன்

N. M. ALLYMARICAN & CO.,

Sanjeevi Sultania Medical Hall,

PORTO-NOVO, S. A. DIST. (INDIA.)

கனவான்களே! முக்கியம்!! கவனியுங்கள்!!!

ஒரே வேளையில் குணந்தெரியும்.

மன்மத சிங்கம்போல் செய்திடும் மெடல்பெற்ற

சுல்த்தானியா

சிட்டுக்குருவி சத்தின் லேகியம்.

இந்த சுல்த்தானியா சிட்டுக்குருவிசத்தின் லேகியத்தைப்போல்
மற்ற வைத்தியர்கள் செய்துகோடுத்தால் 2000-ரூ. இனும்.

நண்பிற்குகந்த அன்பர்காள்! அருமையும், பெருமையும், கீர்த்தியும் பெற்ற இந்த அற்புத குணந்தங்கிய லேகியத்தை உபயோகித்த உத்தமர்கள் மணவாழ்க்கையில் சுகானந்த இன்பத்தைஅடைவார்கள். ஆஹா! குணத்தால் சிறந்ததுதான் என்று இதனைப் பன்முறையும் புகழ்வார்கள்.

இந்த லேகியம் அசல் பாகத்திற்கோர் விகற்பமின்றி தங்கம், வெள்ளி, செம்பு, பவழம் ஆகிய பஸ்பம் செந்தூரங்களும் அம்பர், கஸ்தூரி குங்குமப்பூ, எட்டுவித மிஸ்ரிகள், பத்துவகை விதைகள், எழுவகைமூலிகை சூரணங்கள், ஐந்து வேர் வகைகள் மற்ற அருமையான சரக்குகள் (192-ம்) நிறையளவு குறையாது படி பாகஞ் செய்து வாலையந்திரத்திலிறக்கிய சிட்டுக்குருவி சத்தும் சேர்த்து பாகமாய்ச் செய்யப்பெற்றது.

லேகியத்தின் குணமாவன:— வாதபித்த சிலேத்ம மிகுதிக் குறைவால் ஏற்படும் ரத்தக் குறைவு பல ஹீனம், அஸ்தி வெட்டைச்சூடு, இந்திரியம் ஜலம்போல் நீர்று சிற்றின்பத்திலும், தூக்கத்திலும் அதிகமாய் வெளிப்படல் மணவாழ்க்கையில் சீக்கிரம் வெளியாகிவிடுதல், தாது நஷ்டம், நரம்புத் தளர்ச்சி, சதா இடுப்பு வலி, மலச்சிக்கல், பசி மந்தம் பித்தாதிக்க உஷ்ண வாய்வு, கிருமிரோகம், துர்நீர் வியாதிகள் தேகத்தில் ஓடித்திரியும் பலவித வாய்வு ரோகம், பார்சவாய்வு, நெஞ்சுவலி, விரைவாதம், கைகாலசதி, மயக்கம், மறதி, ஆண்தன்மை நாளுக்குநாள் குறைத்தல் முதலியன நிவர்த்தியாகிவிடும். தேக உஷ்ணத்தை சமனப்படுத்தி இரத்தத்தை விருத்தி செய்து நரம்புகளில் ஓடச்செய்து சப்ததாதுக்களையும் வலுப்படுத்தி நீற்றுப்போன தாதுவைக்கெட்டிப்படுத்தி ஆண் தத்துவத்தை விர்த்தி செய்து புத்தி சாதுர்யத்தை கொடுத்து சிற்றின்பம் நுகர தத்துவரீ கமிழந்த கிழவர்களையும் பால்ய பருவ ஆண்சிங்கமாக்கிவைக்கும். ஸ்திரீ சம்மன்னராய்வாழும் புருஷர்களுக்குப் பால்ய பருவ துர்ச்செய்கையால் நடுப்பிராயத்தில் ஏற்படும் தாது நஷ்டத்தை மறுபடியும் உண்டாக்குவதற்கு இதைவிட மருந்து வேறில்லை. கிழவர்களையும் இந்த லேகியம் இல்லற இன்பத்தை அனுபவிக்கும்படி செய்கிறது. ஒருதடவை பரீக்ஷை செய்துபாருங்கள்.

40நாள் 80வேளை 16பலம் டப்பி விலை ரூ. 12. 20நாள் 40வேளை 8-பலம் டப்பி விலை ரூ 6–8–0.
12நாள் 24வேளை 5பலம் டப்பி விலை ரூ. 3–8–0. 8நாள் 16வேளை $2\frac{1}{2}$பலம் டப்பி விலை ரூ. 2
வி. பி. சேலவு வேறு.

மெடல்பெற்ற

நல்லமுத்து பஸ்பம்.

இந்த பஸ்பத்தைப்போல செய்துகொடுத்தால் ரூ. 3000 இனும்.

இந்த அருமையான பஸ்பத்தை காலை மாலை உபயோக விபரப்படி சாப்பிட்டு வந்தால் வெட்டை, உஷ்ணத்தினால் சுக்கிலம் உடைந்து தானே வெளிப்படுதலுமாகிய சுக்கில பலமிழந்தவர்களுககும், இரத்தக்கொதிப்பு, காங்கை உள்வேகாளம், அழலை, புண், வாய்வேக்காடு, மேகச்சூடு உள்ளவர்களுக்கு பூரண சுகத்தைக் கொடுப்பதுடன் நாடி நரம்புகளுக்கு வலுவைக் கொடுத்து சுக்கிலத்தை கெட்டிப்படுத்தி தேகத்திற்கு நல்ல பலத்தையும், இரத்த விர்த்தியும் தாது புஷ்டியும் உண்டாக்கும். ஒரு மனிதன் வயது 20-க்குள் நாதத்தை பலவிதத்திலும் செலவிட்டு 40-வயதுக்குள் கிழவனைப்போல் நின்று தயங்குகிறார்கள். நம் தேகத்தை வலுப்படுத்தி காப்பாற்ற வேண்டுமென்றால் அகஸ்தியர் தயார்செய்த நல்லமுத்து பஸ்பத்தை 40-நாள் ஒருமண்டலம் சாப்பிட்டால் நம் திரேகம் உடையாமல் கடவுள் கிருபையால் வாழ்ந்திருக்கலாம்.

40நாள் 80வேளை பஸ்பம் ரூ. 50. 14நாள் 28வேளை பஸ்பம் ரூ. 20. வி. பி. சிலவு வேறு.

எமது விலாசம்:—

N. M. அல்லிமரைக்காயன் & கம்பேனி,
சஞ்சீவி சுல்தானியா வைத்தியசாலை
பரங்கிப்பேட்டை P. O.
தென்னாற்காடு ஜில்லா, (இந்தியா.)

பினாங்கு சோல் ஏஜண்டு:—

ஹாஜி A. S. காதர்ராவுத்தர் & கம்பேனி.
நெ. 80, சோலியா ஸ்டிரீட்,
பினாங்கு, S. S.

உலக வர்த்தகம்.

(World Trade.)

இங்கிலாந்து (England) இங்கிலாந்தில் பிப்ரவரி மாத வர்த்தகம் ஜனவரி மாதத்தைவிட குறைவாகவே நடைபெற்றிருக்கின்றன. இறக்குமதி 57,353,979 பவுன். ஜனவரியைவிட 7,300,000 பவுன் குறைவு. இதற்கு காரணம் பிப்ரவரி மாதத்தில் 3 தினங்கள் குறைவு ஏற்றுமதி 30,060,451 பவுன் செய்த சாமான்கள் அதிகமாக ஏற்றுமதி செய்யப்பட்டன.

அமெரிக்கா (United States) 1933-ம் வருடத்தில் அமெரிக்காவில் இறக்குமதி 1449 மிலியன்டாலர் 1932ம் வருடத்தைவிட 100-க்கு 10 பங்கு அதிகம். ஏற்றுமதி 1675 மிலியன் டாலர் முந்தின வருடத்தைவிட 100-க்கு 4 வீதம் உயர்வு. ஜூலை மாத முதல் டிசம்பர் மாதம் வரையில் வர்த்தகம் அபிவிருத்தி அடைந்திருக்கிறது. ஏற்றுமதி 100-க்கு 30 வீதமும் இறக்குமதி 100-க்கு 49 வீதமும் உயர்ந்திருக்கிறது 1933-ம் வருடத்தில் அதிகமாக வியாபாரம் நடைபெற்றிருந்தாலும் 1929-ம் வருடத்திற்கு முந்தின வியாபாரத்தை விட குறைவுதான்.

கானடா (Canada) பூமியிலிருந்து பலவிதமான லோகங்கள் எடுத்தவகையில் கானடாவில் 1933-ம் வருடத்தில் 198,253,000 டாலர் விலை மதிப்பிடப்பட்டிருக்கிறது. 1932-ல் 182,682,000 டாலர் கிடைத்தது. 100-க்கு 8 5 வீதம் உயர்வு.

சைனு (China) சைனுவிலிருந்து தேயிலை 599,938 பைகல்சு பிரதேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. பச்சை தேயிலையை ஆப்பிரிக்காவும், கருப்பு தேயிலையை இங்கிலாந்தும், பிரிக்டீ ரசியாவும் அதிகமாக இறக்குமதி செய்தன. (1 பைகல் 133⅓ பவுன் எடை).

தென் ஆப்ரிக்கா (South Africa) தென் ஆப்பிரிக்கா நாணயத்தின் விலையைவிட அமெரிக்கா நாணயத்தின் விலை சௌகர்யமாகயிருந்ததின் காரணமாக ஏராளமான அமெரிக்கா மோட்டார்கார்கள் தென் ஆப்பிரிக்காவில் இறக்குமதி செய்யப்பட்டன. ஜனவரி மாதத்திலிருந்து செப்டம்பர் மாதத்திற்குள் அமெரிக்காவிலிருந்து 100க்கு 67-வீதம் மோட்டார்கார்கள் இறக்குமதி செய்யப்பட்டன.

சைபிரஸ் (Cypress) 1932ம் வருடத்தைவிட 1933ம் வருடத்தில் சைபிரஸ் தேசத்தில் வர்த்தகம் மிகவும் குறைந்து போயிற்று இறக்குமதி 1,257,368 பவுன் (1,347,595 பவுன்) ஏற்றுமதி 898,981 பவுன் (946,132 பவுன்)

போர்ச்சுகல் (Portugal) போர்ச்சுகல் தேசத்தில் 1933-ம் வருடத்தில் முதல் 10 மாதங்களில் இறக்குமதி 13,580,000 பவுன் முந்தினவருடத்தில் 12,970,000 பவுன் நிலக்கரி, இரும்பு, ரசாயன சாமான்கள்; பருத்தி, கம்பளி, தோல், மெஷின்கள் அதிகமாக இறக்குமதி செய்யப்பட்டன. ஏற்றுமதி 5,660,000 பவுன், இங்கிலாந்திலிருந்து மோட்டார்கள் அதிகமாக இறக்குமதி செய்யப்பட்டன.

லிதுவானியா (Lithuvania) 1931 1932-ம் வருடங்களைவிட லிதுவானியா தேசத்தின் வியாபாரம் 1933ம் வருடத்தில் இன்னும் குறைந்துபோயிருக்கிறது இறக்குமதி 1933ல் 142,176,200 லிட்டாஸ், 1932ல் 166,953,500 லிட்டாஸ் 1931ல் 277,959,100 லிட்டாஸ் ஏற்றுமதி 1933ல் 160,227,400 லிட்டாஸ் 1932ல் 189,125,800லிட்டாஸ் 1931ல் 273,119,000 லிட்டாஸ்.

நார்வே (Norway) நார்வே தேசத்தில் 1933ம் வருடத்தில் வியாபாரம் குறைவாக இருந்தன. இறக்குமதி 663.3 மிலியன் குரோனர் (690.4 மிலியன் குரோனர்) ஏற்றுமதி 557.7 மிலியன் குரோனர் (586.7 மிலியன் குரோனர்.)

சுவிட்ஜர்லாந்து (Switzerland) சுவிட்ஜர்லாந்து தேசத்தில் 1933ம் வருடத்தில் ஏற்றுமதி வியாபாரத்தில் அபிவிர்த்தியும் இறக்குமதி வியாபாரத்தில் குறைவும் ஏற்பட்டன. ஏற்றுமதி 853 மிலியன் பிராங்கு (801 மிலியன் பிராங்கு) இறக்குமதி 1513 மிலியன் பிராங்கு (1763 மிலியன் பிராங்கு.)

நியூஜிலந்து (New Zealand) நியூஜிலண்டு தேசத்தில் 1932ம் வருடத்தைவிட 1933ல் குறைவாகவே வியாபாரம் நடைபெற்றிருக்கின்றன. 1932ம் வருடத்தில் ஏற்றுமதி 36,965,780 பவுன் இறக்குமதி 23,045,106 பவுன் 1933ம் வருடத்தில்ஏற்றுமதி 41,301,951பவுன் இறக்குமதி 21,451,382 பவுன்.

திருச்சி ஜில்லா தமிழ வியாபாரிகள் சங்கம்.

1934ளு ஏப்ரல்மீ 8-உ இச்சங்கத்தின் நிர்வாகக்கூட்டம் சங்கக்கட்டிடத்தில் மாலை 6-மணிக்கு தலைவர் திருவாளர் பெ. அந்தோனியா பிள்ளை அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேறின.

1. தற்போது ஜெனரல் மார்க்கட்டில் கடைகள் வைத்து வியாபாரம் செய்துவரக்கூடிய வியாபாரிகள் கடை ஒன்றுக்கு 3-மாத வாடகைப்பணம் அட்வான்ஸ் கட்டவேண்டுமென்று முனிசிபாலிட்டியாரால் ஏற்படுத்திய உத்திரவானது தற்போது வியாபாரிகளுக்கு வியாபாரம் மந்தமாயும், பணக்கஷ்டம் அதிகமாயும் இருப்பதால் வியாபாரிகளை கஷ்டப்படுத்தக்கூடியதா யிருப்பதினுல் ஷெ உத்திரவை ரத்துசெய்து முன்பு வசூல் செய்ததுபோல் தினசரியாக வசூலிக்கும் படி முனிசிபல் சேர்மன் அவர்களை கேட்டுக்கொள்ளுகிறது.

2. தற்போது டவுனில் தண்ணீர்க் கஷ்டம் அதிகமாயிருப்பதால் ஜனங்கள் சுகாதாரக்குறைவான குளம், கிணறுகளிலும், உள்ள ஜலத்தைஉபயோகித்து வருகிறுர்கள். இதனுல் டவுனில் பல தொத்து வியாதிகள் ஏற்படுமென்றும் தண்ணீர் கஷ்டத்தை கூடிய சீக்கிரம் நிவர்த்திக்குமாறு சென்னை முதல்மந்திரி டைரக்டர் ஆப் பப்ளிக்ஹெல்த், சானிட்டேரி இஞ்ஜினியர் முதலியோருக்கு தெரிவிக்கும்படியாக தீர்மானிக்கப்பட்டது.

ராட்டர்டாம் (Rotherdam) ராட்டர்டாம்முக்கு முக்கியமாக இறக்குமதி செய்யக்கூடியது நிலக்கரி. 1929ம் வருடத்தில் 1,600,000 டன் இறக்குமதியானது 1933ல் 900,000டன்

பிரேஜில் (Brazil) 1933ம் வருடத்தில் பிரேஜில் தேசத்தில் ஏற்றுமதி 47 மிலியன் பவுன் இறக்குமதி 36 மிலியன் பவுன் வியாபாரம் சென்ற ஆண்டுகளைப்போல் ஒரே நிலைமையிலிருந்தது.

ஜர்மன் சாமான்கள் எந்தெந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றனவோ, அந்நாட்டு சாமான்கள்தான் இனி ஜர்மெனியில் இறக்குமதியாகலாமென்றும், கூடுமானவரையில் இந்தகொள்கையே இனி அனுஷ்டிக்கப்படுமென்றும், அன்னிய நாட்டுமந்திரிவான் நியூராத் ஒருவிருந்து வைபவத்தில் தெரிவித்தார்.

இந்திய வர்த்தகம்.

(Indian Trade Statistics.)

இந்தியா (India)

1933-ம் வருஷம் கடைசி 9 மாதங்களில் இந்தியாவின் ஏற்றுமதி வியாபாரம் 100-க்கு 12 வீதம் முந்திய வருஷத்தைவிட அதிகரித்ததுடன், இறக்குமதியும் 100-க்கு 17 குறைந்ததாக ஹைகமிஷனர் யாதாஸ்து மூலம் தெரிகிறது. வியாபார அநுகூலம் இந்தியாவுக்கே இருக்கின்றது. 35½-கோடிக்குத் தங்கம் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. இந்தியாவுடன் பிரிட்டன் வியாபாரம் 100-க் 35.8லிருந்து 41.3க்கு உயர்ந்திருக்கிறது. பீஸ்ஜவுளி, இரும்பு வியாபாரம் கொஞ்சம் குறைந்தாலும், ஒட்டாவா ஒப்பந்தத்தால் வியாபாரம் அதிகரித்திருக்கிறது.

கோச்சி (Cochin)

1933-34-ம் வருஷத்தில் கொச்சி துறைமுகத்தில் நடைபெற்றவியாபாரத்தைப்பற்றிய புள்ளி விவரங்கள் இப்பொழுது தான் கிடைத்திருக்கின்றன. 1928-ம் வருஷத்தில் தான் முதன் முதலாக கொச்சி ஹார்பருக்கு ஸ்டீமர் வந்தது. 1929-ம் வருஷத்திற்குள் 439 ஸ்டீமர்கள் கொச்சி துறைமுகத்திற்கு வந்தன. 1933-34ம் வருஷத்தில் 681 ஸ்டீமர்கள் கொச்சி ஹார்பருக்கு வியாபார நிமித்தம் வந்தன. 1931-ம் வருஷம் 396806 டன்சாமான்கள் இறக்குமதியும் 1,01,354 டன்சாமான்கள் ஏற்றுமதியும் செய்யப் பட்டன. 1933-34-ம் வருஷத்திய் சுமார் 6,30,800 டன்சாமான்கள் இறக்கு மதியும், 1,08,000 டன்சாமான்கள் ஏற்று மதியும் செய்யப்பட்டன. இரவுநேரத்தில் கப்பல்கள் வரவும் புறப்படவும் சௌகரியமாக மின்சார விளக்குகள் போடவும் ஏற்பாடாகி வருகிறது.

சென்னை (Madras) 1934 வருடம் மார்ச்சு மாதத்தில் சென்னை மாகாணத்தின் வர்த்தகம் இறக்குமதி மூலமாக ரூ. 1,30,32,126. முந்தின வருடத்தில் இதேமாதத்தில் ரூ. 1,23 55,622. வித்யாசம் ரூ. 6,76,504. பழவகைகள் போர்ச்சுகலுக்கு சொந்தமான கிழ்ஆப்பிரிக்கா தேசத்திலிருந்து காஷியுநட் அதிகமாக இறக்குமதி செய்யப்பட்டது. சென்ற வருடத்தைவிட இவ்வருடம் ரூ. 203427 அதிகம். இண்டோ சைனவிலிருந்தும் சயாமிலிருந்தும் 18447 டன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டன. சென்ற வருடத்தில் 797-டன். விலையில் ரூ. 8,44,293 அதிகம். ஜவுளிகள் இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட வகையில் ரூ. 52,426 அதிகம். ஜப்பானிலிருந்து சேர்க்கைப்பட்டு இறக்குமதியில் ரூ. 2,04,597 அதிகம். அமெரிக்காவிலிருந்து புகையிலை இறக்குமதியில் ரூ. 2,61,709 அதிகம். கிரோசின் எண்ணை சுமத்திராவிலிருந்தும், ரஷியாவிலிருந்தும் அதிகமாக இறக்குமதி கிடையாது. சென்ற வருடம் மார்ச்சு மாதத்தில் 21,31,506 காலன் இறக்குமதியாயிற்று. இவ்வருடம் 81,306 காலன். சர்க்கரையும் ஜாவாவிலிருந்து அதிகமாக வரவில்லை. சென்ற வருடம் 5,245 டன். இவ்வருடம் 2,458 டன். மற்ற சாமான்கள் ரூ. 3,16.453 அதிகம் இறக்குமதியாகியிருக்கின்றன. ஏற்றுமதி-மார்ச்சுமாதத்தில் சென்றமாதத்தைவிட ரூ.7,82,974 அதிகம். சென்றவருடம் ரூ.22647004. இவ்வருடம் ரூ. 2,34,29,978. காப்பி இங்கிலாந்துக்கும் மேல் நாடுகளுக்கும் குறைவாக ஏற்றுமதி செய்யப்பட்டன. இதனல் சென்ற வருடத்தைவிட ரூ. 9,43,087 குறைவு. இதேபோல் இலங்கைக்கு அரிசி குறைவாக ஏற்றுமதி செய்யப்பட்டது. சென்ற வருடத்தில் 7,899 டன். இவ்வருடத்தில் 6.865 டன். ஆமணக்கெண்ணெய் சென்ற வருடம் 5,070 டன் அனுப்பப்பட்டது. இவ்வருடம் 1,656 டன். இதனல் ரூ. 4,34,240 குறைவு. நிலக்கடலை பிரான்சுக்கும் நெதர்லாண்டுக்கும் குறைவாக ஏற்றுமதி செய்யப்பட்டன. சென்ற வருடத்தில் 32,054 டன். இவ்வருடம் 27,237 டன். விலை வித்யாசம் ரூ. 19,38.959. கைக்குட்டைகள் ஏற்றுமதியிலும் சென்ற வருடம் ரூ. 4,50,648 இவ்வருடம் ரூ 42,864. இதனல் ரூ. 2,36,314 குறைவு. சென்ற வருடத்தைவிட கயர் இங்கிலாந்துக்கு அதிகமாக ஏற்றுமதி செய்யப்பட்டது. இதில் ரூ. 1.96,029 அதிகம். மாட்டுத்தோல், ஆட்டுத்தோல் ஏற்றுமதியில் ரூ. 22,88,980 அதிகம். ரப்பர் இலங்கைக்கும் இங்கிலாந்துக்கும் அதிகமாக அனுப்பப்பட்டது. சென்றவருடம் 44,334 பவுண்டு இவ்வருடம் 16.03,765 பவுண்டு. விலை வித்தியாசம்ரூ 4,48,158. இட்டாலிக்கும் சைனவுக்கும் பருத்தி அனுப்பியதில் அதிக தொகை ரூ. 4,94,002. மற்ற சாமான்களில் அதிகம் ரூ. 12,10,116.

மொத்தத்தில் சென்னை மாகாண வர்த்தகம் சென்ற வருடத்தைவிட ஒரு லட்சம் ரூபாய் அதிகம்.

வர்த்தகக் குறிவழக்கு

(Infringement of Trade Mark)

சென்னையில் குடை வியாபாரம் செய்யும் இப்ராஹீம் கரீம் அண்டு சன்சு கம்பெனியார் அவர்களுடைய 611 ம் நெம்பர் மார்க்கைப்போல் 6011 என்று மார்க்கை போட்டு எ. கே. அப்துல்லா சாயபு குடை வியாபாரம் செய்ததை தடை செய்ய வேண்டு மென்று பிராது செய்திருந்ததை கோர்ட்டார் ஏற்றுக்கொண்டு தடை உத்திரவு கொடுத்திருக்கிறார்கள்.

* *

கல்கத்தா புரூக்பாண்டு இந்தியா லிமிடெட் கம்பெனியார் தங்கள் டில்குஷ் காபி விற்பனையில் உபயோகப்படுத்தும் வர்ணம், அமைப்பு, சித்திரம் அடங்கிய லேபில்களைத் தாங்கள்தான் உபயோகப்படுத்தக்கூடுமென்று பிரதிவாதிகளாகிய தூத்துக்குடி அய்யனர் காபி, டிவொர்க்ஸ் கம்பெனியாரும் அவர்கள் ஏஜண்டுகளும் வாதிகளுடையதல்லாத சரக்குகளைவாதிகளுடையதுபோல் விற்பனை செய்யக் கூடாதென்றும் தகர டப்பாக்களில் "சூபர்பைன்" என்று போடப்பட்ட லேபில்கள் வாதிகளின் லேபில்கள்போலிருப்பதால் அம்மாதிரி லேபில்கள் போடாமலிருக்கவும்தடையுத்தரவுபிறப்பிக்க வேண்டுமென்ற வழக்கில் கோயம்புத்தூர் சப்ஜட்ஜ் தீர்ப்புக்கூறினர். பிரதிவாதிகள் எதிரி வியாஜ்யம் செய்ததில் வாதிகள்வழக்குபோட நியாயமில்லையென்றும் லேபில்கள் மிகவும் வித்தியாசப்படுகிறதென்றும் அதை படிப்பில்லாதவரும் அறியக்கூடுமென்றும் வாதிகளுக்கு தடைஉத்திரவிற்கு சுதந்திரமில்லை என்றும் கூறினர்கள். ஜட்ஜ் தனது உத்திரவில் பிரதிவாதிகளின் காப்பி வாதிகளின் காபிக்கு பிற்பாடு வந்ததென்றும் வாதிகளின் காபிக்கும் லேபில்களுக்கும் ஓர் பேர் வந்திருக்கிறதென்றும் பிரதிவாதிகளின் லேபில்கள் வாதிகளின் லேபில்கள் போலிருக்கின்றன வென்றும் ஆகையால் வாதிகளுக்கு தங்கள் லேபில்களை உபயோகப்படுத்த தனி சுதந்திர முண்டென்றும் கூறி பிரதிவாதிகளை வாதிகள் லேபில்கள் மாதிரி "சூபர்பைன்" லேபில்கள் போடக்கூடாதென்றும் தடை உத்தரவு பிறப்பித்தார்.

ஏஜண்டுகள் தேவை.

"வர்த்தக ஊழியன்" பத்திரிகைக்கு சந்தாதாரர்கள் சேர்க்கவும், விற்கவும் விளம்பரங்கள் சேகரிக்கவும் செல்வாக்குள்ள ஏஜண்டுகள் முக்கிய பட்டணங்களில் தேவை.

மார்க்கட்டுகளின் நிலவரம்.

(Market Reports.)

திருச்சி ஏப்ரல்-மீ 27உ

தங்கம் வெள்ளி	ரூ.	அ.	பை.
சவரன்	21	5	0
வெள்ளி ரூபா எடை	0	9	6
மளிகை			
பச்சரிசி 50-படி மூ. 1-க்கு	8	8	0
புழுங்கல் அரிசி மூ. ,,	6	4	0
பழையநெல் 50-படி மூ.1-க்கு	3	10	0
புதுநெல் ,, ,,	3	0	0
துவரம்பருப்பு ,, ,,	13	4	0
உளுந்து ,, ,,	11	0	0
மிளகாய் மணங்கு 1-க்கு	6	0	0
நெய் முதல்தரம் ம. 1-க்கு	15	0	0
எண்ணெ			
நல்லெண்ணெ ஆடம் 1 க்கு	6	4	0
விளக்கெண்ணெ ,,	4	12	0
தேங்காய் எண்ணெ ,,	4	2	0
கடலெண்ணெ ,,	3	2	0
சோப் தினுசுகள்			
10 அவுன்ஸ் சன்லைட் டஜன் 1-க்கு	2	7	0
8 ,, ,,	1	15	0
விநோலியா ஓயிட்ரோஸ் பெட்டி 1-க்கு	0	13	0
பியர்ஸ் சோப் பெட்டி 1-க்கு	1	0	0
மைசூர் சந்தன சோப் ,,	0	12	0
ஓவல்டைன் 1-பவுன் டப்பி	2	1	0
ஷை ½ ,,	1	3	0
தீப்பெட்டி			
வெட்டும்புலி குரோஸ் 1-க்கு	2	9	0
சிமெண்டு			
கை மார்க்கு பீப்பா 1-க்கு	11	12	0
ஷை 1-அந்தர் மூ. 1-க்கு	3	3	6
ஷை 94-ராத்தல் ,,	2	10	0
கோபுரம் 1-அந்தர் ,,	2	13	6
லங்கர் ,, ,,	2	7	0
தானியங்கள்			
நாட்டு உளுந்து படி 6¼	1	0	0
வயல் உளுந்து படி 8	1	0	0
பச்சை பயிர் படி 9½	1	0	0
பாசிப் பயிறு படி 6½	1	0	0
ரங்கூன் மொச்சை படி 5½	1	0	0
குத்துக்கடலை படி 6½	1	0	0
கடலைப்படி 6	1	0	0
துவரம்பருப்பு படி 4½	1	0	0
உளுத்தம்பருப்பு படி 5	1	0	0
மல்லி படி 11	1	0	0
கொட்டைமுத்து படி 9¼	1	0	0
கொள்ளு படி 10¼	1	0	0
கம்பு படி 12	1	0	0
கேழ்வரகு படி 15	1	0	0
சோளம் படி 12	1	0	0
கடுகு படி 5½	1	0	0
சீரகம் மணங்கு 1-க்கு	5	4	0
மிளகு மணங்கு 1-க்கு	6	0	0
புளி ,, ,,	1	8	0
மஞ்சள் ,, ,,	2	0	0
பூண்டு ,, ,,	4	0	0
காய்கறிகள்			
கத்தரிக்காய் வெளியூர் மூட்டை 1-க்கு	2	0	0
உள்ளூர் கூடை 1-க்கு	2	0	0
முருங்கக்காய் வெளியூர் மூட்டை 1-க்கு	2	8	0
பச்சைமிளகாய் ,,	5	8	0
வாழைக்காய் மொந்தன் 100	0	14	0
1-நெ. ரஸ்தாளி 1000	8	8	0
2-நெ. ஷை 1000	7	0	0
தேங்காய் பெரியது 100	1	12	0
,, சிறியது 100	1	4	0

சென்னை ஏப்ரல், 26—

நோய் அரிசி:—210 ராத்தல் மூட்டை 1-க்கு ரெங்கூன் ஆபீஸ் ரகம் நெ. 1 ரூ. 5-8-0, நெ. 2 ரூ. 5-4-0, நெ. 3 ரூ. 4-14-0, நெ. 4 ரூ. 5-4-0.

240 ராத்தல் மூட்டை 1-க்கு சிங்கப்பூர் 1 ரூ. 6-4-0. சிங்கப்பூர் எக்ஸ்ட்ரா ரூ. 6-4-0.

220 ராத்தல் மூட்டை 1-க்கு செய்கோன் நெ 1 ரூ. 5-4-0, நெ. 2 ரூ. 6-3-0.

பச்சைஅரிசி:—டில்லி போசம் (166 ராத்தல்) மூட்டை ரூ. 7-8-0.

தென்னுலி (164) ராத்தல் மூட்டை ரூ. 7-4-0.

ரங்கூன் பச்சரிசி வெள்ளை (240 ராத்தல் ரூ. 7. மேற்படி சிகப்பு ரூ. 6-14-0 செய்கோன் பச்சரிசி (224 ராத்தல்) ரூ. 6-8-0.

புட்டரிசி:— 40 ராத்தல் மூட்டை 1-க்கு வெள்ளை ரூ 4-10-0, கருப்பு ரூ 6-8-0

புழுங்கலரிசி:--104 ராத்தல் மூட்டை 1க்கு சினேட் ரூ 5-14-0.

கோதுமை:—கண்ட்வா கோதுமை ரூ 12-8-0 ஷர்பத்தி ரூ 9-4-0, பாசம் கோதுமை ரூ. 14-12-0,

துவரை:—இந்துஸ்தான் (200 ராத்தல்) ரூ. 9, சித்தப்பூர் ரூ. 9-4-0.

கொள்ளு:—திருப்பத்தூர் 52 படி ரூ. 4-14-0.

துவரம் பருப்பு:—கல்கத்தா 205 ராத் நெ. 1 ரூ. 9-12-0, நெ. 2 ரூ. 9-4-0, நெ. 3 ரூ. 9, கான்பூர் ரூ. 10, கேசரி மெஷின் பருப்பு 205 ராத்தல் ரூ. 8-14-0, கேசரி மெஷின் பருப்பு நெ. 2 ரூ. 8-12-0, நெ. 3 ரூ. 8-6-0.

கடலைப் பருப்பு:— கொட்கோபார் (205 ராத்தல்) ரூ. 8-8-0, பரதந்தா (205 ராத்தல்) ரூ. 8-6-0.

கடலை:—காராச்சி (205) ரூ. 7-6-0 பஞ்சாப் (¾) ரூ, 7-8-0, பஞ்சாப் (முழு உருவு) ரூ. 7-7-0, கட்கோ ரூ. 8.

விருதுநகர் ஏப்ரல் 25உ

துவரம்பருப்பு:—கோகலா ரூபாய்க்கு படி 4-11 முதல் 4-13வரை, குஜராத்தி நயம் படி 4-7 முதல் 4-8வரை, ரங்கூன் ரோஸ் படி 5-0 முதல் 5-1வரை, மெண்டு ரங்கூன் படி 4, நாடு நயம் 6-6 படி முதல் 6-8 வரை, துவரை நாடு நயம் படி 8-8 முதல் 9-8 வரை.

உளுத்தம் பருப்பு:—நாடு நயம் படி ரூபாய்க்கு 4-15 முதல் 4-15½ வரை, ரங்கூன்படி ரூபாய்க்கு 5-13 முதல் 5-14 வரை, பச்சை படி 5-11 முதல் 5-12 வரை, உளுந்து நாடு நயம் ரூபாய்க்கு படி 6-0 முதல் 6-2 வரை.

ஏலக்காய்:—ஸ்டோர் 800 ரூ. எடை விலை ரூ. 22 முதல் 26 வரை, தரைப் பாடம் ரூ. 17 முதல் 19½ வரை வெள்ளைப் பாடம் ரூ. 18¾ முதல் 19¼ வரை, மைசூர் நயம் ரூ. 23 முதல் 26 வரை, ஏல அரிசி துலாம் 1-க்கு ரூ. 25 முதல் 27½ வரை.

காப்பி:—ரோதை மனு ரூ. 10-4 முதல் 11-10 வரை, சாதா மனு ரூ. 9-4 முதல் 9-6 வரை, உருட்டு மனு ரூ 15-0 முதல் 15-4வரை, ரோபஸ்டா உருட்டு ரூ 11-8 முதல் 12-0 வரை, சாதா உருட்டு மனு ரூ 12-8 முதல் முதவ 12-12 வரை, ரோபாட்டா மனு ரூ 8-1 முதல் 8-10.

எள்ளெண்ணெய்:—40-ராத்தல்டின் (உடன்) ரூ 5-12 முதல் 5-14 வரை, கடலை எண்ணெய் 38-ராத்தல் டின் ரூ 2-15 முதல் 3 வரை, ஆமணக்கெண்ணெய் 38-ராத்தல் டின் 4-8.

மணிலாக்கொட்டை:—ரூபாய்க்கு படி 27 முதல் 38 வரை.

ராஜம்—சமூகசீர்திருத்தக் கதை.

Social Reform Novel.

(திரு. எம். எஸ். ஆர். சந்திரன் எழுதியது.)

மார்ச்சுமாதத் தொடர்ச்சி.

அத்தியாயம் 21.

"சமையல் ஆகிவிட்டதா, சாப்பிடலாமா?" ராஜம்.

"ஒரு மணிக்கு முன்னரே தயார் செய்து விட்டேன்"

"எங்கே நம்ம முத்துவும் மாப்பிள்ளையும்"

"எனக்குத் தெரியாது அவர்கள் சென்றவிடம்"

"மணியோ எட்டுமாகி ஸ்டேட் குண்டும் போட்டாகிவிட்டது." என் இன்னம் அவர்கள் வரவில்லை. வெளியில் சென்றால் காலாகாலத்தில் வீட்டுக்கு வரவேண்டுமே என்ற ஞாபகம் இருப்பதே இல்லை. முத்துக்குக் கலியாணம் ஆகவில்லை. கலியாணம் ஆகியிருந்தால் அவனுக்குக் குடும்ப வருத்தம் தெரியும். நீ கஷ்டப்படுவதை அவன் எப்படி அறியமுடியும்."

"என் மாதிரி இரவில் யார் தைரியமாக அப்பாவை திரஸ்கரித்துவிட்டு பர்த்தா வேண்டுமென்று வலுவில் வந்து சேருவாள். என் மாதிரியல்லவா ஒருவள் அண்ணாவுக்கு வரவேண்டும்."

"நீ அப்படி வந்து என்னைக் கலியாணம் செய்துகொண்டதில் உனக்கு என்ன குறை ஏற்பட்டது சொல்லு பார்ப்போம்."

"ஒன்றுமில்லை. அண்ணாவுக்கு கலியாணம் செய்து வைக்க ஏன் நீங்கள் முயற்சிக்கக்கூடாது. எத்தனையோ பெரிய உத்தியோகஸ்தர்கள் இருக்கும் இடமாயிற்றே, ஒருவதா எனது அண்ணாவுக்குக் கிடைக்கவில்லையா?"

"வதூ எத்தனையோ கிடைக்கும். ஆனால் அவன் பார்ப்பது வேறு இடமாக இருக்கிறது. நான் எப்படி உன்னை மணந்து கொண்டேனோ அப்படியே அவனும் ஒரு இடம் பார்த்துக்கொண்டிருக்கிறான். கிடைத்தால் செய்யலாம் என்று தான் பார்க்கிறேன்."

"அண்ணாவுக்கும் இங்கேயே ஒருஉத்தியோகத்துக்கு ஏற்பாடு செய்யலாகாதா"

"அப்பா, அம்மா எல்லாரும் அங்கிருக்கும்போது, நிலம், வீடு வாசல் அங்கிருக்கும்போது அவனை இங்கேயே இருந்து விடு என்றுதான் நான் சொல்ல முடியுமா. சொன்னால் அப்பா சம்மதிப்பாரா. இவற்றையெல்லாம் நீயோசிக்க வேண்டாமா"

"நான் தங்களை மணந்து கொண்டது என் தகப்பனார் சொன்னபடிதான் நடந்ததோ. முக்கியமான விஷயத்தில் அப்பா பேச்சு எடுபடவில்லை. அப்பா சொன்ன விடத்துக்கு உங்கள் தங்கையும், உங்கள் நண்பர் சொன்ன இடத்துக்கு நானும் வாழ்க்கைப்படவில்லையா. அதைவிட இது பெரிய விஷயமா. உத்தியோகம் என்றால் அப்பாவாகட்டும் அம்மாவாகட்டும் ஒருவருமே கோபிக்க மாட்டார்கள். அண்ணாவுக்கும் சீக்கிரம் உத்தியோகம் செய்து வையுங்கள்."

இங்ஙனமாக மணியும், பெரிய ராஜமும் ஹைதராபாத்தில் ரெஸிடெண்டு ரஸ்தாவில் அந்தப் பெரிய வாடகைவீட்டில் மணி ஒரு சாய்மான நாற்காலியில் சாய்ந்துகொண்டு இளைப்பாறிக்கொண்டிருக்க பக்கத்தில் வேறு சாதா நாற்காலியில் பெரிய ராஜம் உட்கார்ந்து மணிக்கு விசிறிக்கொண்டே இனிய சம்பாஷணை நடைபெறும் சமயம், கதவை யாரோ தட்டிக்கூப்பிடும் சத்தம் காதில் விழ "யாரது" என்றான் மணி. "நான் ரெஸிடெண்டு சேவகன்" என்ற சத்தம் காதில் பட்டதும் "ராஜம் கதவைத் திற" என்றான் மணி. ராஜம் வாசற் கதவைத் திறந்தாள். ரெஸிடெண்டு சேவகன் உள்ளே வந்து ஒரு கடிதத்தை நீட்டினான். மணி "துரை என்ன செய்கிறார்" என்று சேவகனைக்கேட்க "துரை துரைசானியுடன் பேசிக்கொண்டிருக்கிறார்" என்று பதில் சொன்னான்.

"சேவகா, நான் கொடுக்கும் கடிதத்தைக்கொண்டு போய் ரங்கனாதபுரம் ராணியிடம் கொடு" என்று சொல்லி பதில் கடிதம் ஒன்றை எழுதி கையில் கொடுத்துவிட்டு தன்னுடைய சேவகனை தன்னிடம் அனுப்பிவிக்குமாறு தெரிவித்தான் கடிதம் எழுதிக்கொடுக்கும்போதும் பேசும் போதும் மணிக்கு அடிக்கடி புன் சிரிப்பு தோன்றலாயிற்று இதனை வெகு கவனமாகப் பார்த்துக்கொண்டிருந்த ராஜம் "என்ன உங்கள் முகத்தில் புன் சிரிப்புக் குறிகள் தோன்றுகின்றனவே" என்றாள். "அதிருக்கட்டும், வாசற்கதவைசாத்தித்தாழ்ப்பாளிடு. அவர்கள் வந்தால் கதவைத்திறக்கலாம்" என்று சொன்னதும் ராஜம் சென்று கதவை தாழ்ப்பாளிட்டு வந்து நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு "என்னிடம் சொல்லக்கூடாதா. சரி வேண்டாமே" என்று கூறிவிட்டு முகத்தை சற்று திருப்பிக்கொண்டாள்.

மணி:—உனக்குச் சொல்லாததும் உண்டா?

ராஜம்:—என்ன விசேஷம், ரெஸிடெண்டிடமிருந்து.

மணி:—நாம் இருக்கிற இந்த வீட்டுக்கு ராணி வரப்போகிறாள்.

ராஜம்:—யார். எந்த ராணி-நவாபின் மனைவியா?

மணி:—இல்லை, இல்லை. ரங்கனாதபுரத்து ராணி.

ராஜம்:—அன்று தர்பாருக்கு வந்தாளே, அவள் தானே.

மணி:—ஆம்.

ராஜம்:—அவளோடு இன்னும் யார் வருகிறார்கள்.

மணி:—அவள்மட்டும் தனியாக வருகிறாளாம். ராஜாங்க தோரணையில் வரவில்லையாம். அப்படி துரைகுறிப்பில் காணப்பட்டிருக்கிறது.

ராஜம்:—அந்த துரை குறிப்பைக் கையில் கொடுங்கள்என்று கேட்டு வாங்கிப்படித்துப் பார்த்தாள், அதில் "சின்ன ராணி" என்று கண்டிருந்தது. (அதற்குக் காரணம் ஸ்வர்ணபுரியில் சிலநாள் தங்கும்போது ஸ்வர்ணபுரி ராணிக்குப் பெரியராணியென்றும் புதிதாகப்பட்டம் பெற்ற ராணிக்கு சின்ன ராணி என்றும் பெயர் வழங்கலாயிற்று) தனியாக உம்மைப் பார்க்க நாளை காலை 8 மணிக்கு வருகிறபடியாலும், ராஜாங்க தோரணையொன்றும் இல்லாததாலும் அதிக ஆடம்பரமின்றி மரியாதைகளில்

குறைவு எற்படாவண்ணம் ராணியை வரவேற்றுஉபசரிக்கவேண்டியது, காலே காபி வகையருவழங்குவதில் ஜாக்கிறதை யாக இருக்கவும் எனென்றால் காலே ஆகாரத்தில் கோளாறு எற்படுமோனல் குற்றம் உம்மைச்சேரும். ஆகாரத்தை தயாரிப்பதில் வெகு ஜாக்கிறதையாக இருக்கவேண்டியது. ஜாக்கிரதை எடுத் துக்கொள்ள முடியாமற்போனல் பழங் களை மட்டும் கொடுத்துப் பேசிவிட்டு அனுப்பவும். நமது ராசாங்க அந்தரங்கங் களைத் தெரிவிக்கவேண்டாம். தெரு விலும், ரஸ்தாவிலும் பந்தோபஸ்து வேண்டுமோனல் உடனே தெரிவித்தால் அதற்கான எற்பாடுகளைச் செய்ய உத் திரவிடுகிறேன், என்று கண்டிருந்தது.

ராஜம்:—ராணி எதற்காக இங்கே வருகிறுள்.

மணி:—எதாவது ராஜாங்க விஷய மாகப் பேசவரலாம்,

ராஜம்:—நாம் இங்கு வந்த பிறகு ஒரு ராணி கூட இங்கு வந்ததில்லேயே இது தான் முதல் தடவை மேலும் முதல் ராணி.

ராஜம்:—வீடு மிகச் சிறியதாயிற்றே. அரண்மனையில் வசித்தவளுக்கு இது ஒரு குடிசை போலல்லவா இருக்கும்.

மணி:—இதற்காக இப்பொழுது எங்கே வேறு இடத்துக்குச் சென்று அதிக வாடகையில குடியிருக்க முடி யுமா? இருக்கிற இடத்தில் இருந்துதான் மரியாதை செய்யவேணும்.

ராஜம்:—பந்தோபஸ்து வேண்டுமா? என்ன?

மணி:—பந்தோபஸ்தா ....

ராஜம்:—பந்தோபஸ்து இந்தோபஸ்து மேளதாளம் முதலியன வைத்தால்தான் கூட்டம் சேரும். நம்ம ஆத்துக்கு ஒரு ராணி வந்துவிட்டுப் போனள் என்ற கௌரவம் நமக்கு எற்படும்,

மணி:—ஸ்திரீகளின் புத்தியே விசித் திரம். இதுகாறும் நீ அதிகம் படித்த வள், புத்திசாலி என்று நினைத்தேன். ஸ்திரீகளுக்குரிய குணம் உன்னை விட் டுப் போகவே இல்லே.

ராஜம்:—என் அப்படிச் சொல்லுகி றீர்கள்.

மணி:—ராணி வருவதும் போவதும் அந்தரங்கமாகவே இருக்கவேணும். தட புடல் எதாவது செய்தால் பலர் பலவித மாக நினைக்க சந்தர்ப்பம் எற்பட்டுவிடும். ராணி வந்தால் கொஞ்சம் ஜாக்கிரதை யுடன் இருந்து காபி, ரவாகேசரி, உப் புமா முதலியனவற்றைத் தயாரிக்க வேண்டும். தயாரிக்கும்போது வெகு ஜாக்கிரதையாகத் தயார் செய், எனென் ருல் ஈ எதாவது விழுந்தோ அல்லது வேறு காரணத்தால் பதார்த்தம் கெட் டுப்போய் விஷத்தைக் கொடுக்கக்கூடிய தாக மாறி மயக்கம் போட்டு விழுந் தாலோ நமக்கு பெரும் ஆபத்து எற்பட்டு விடும். ராணி வருவதற்குள் பதார்த்தம் தயாராகி நன்ருக மூடி வைத்துவிடு.

ராஜம்:—"அப்படியே செய்கிறேன்" என்று சொல்லிவிட்டு தன் சமயலரைக் குச் சென்று இரவு போஜனத்துக்கான எற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தாள். ராணி தன் வீட்டுக்கு வரப்போகின்றுள் என்ற சந்தோஷத்தால் அவளை முன் னம் தான் சந்தேகித்ததுகூட அவள் ஞாபகத்தில் உதிக்கவில்லே.

நாற்காலியில் சாய்ந்துகொண்டே மணி பலவாறு சிந்திக்கலானன். வரு கிறவள் தன் தங்கையென நன்கு தெரிந் துகொண்டான். ராஜத்தை ஸ்வர்ணம் நேரில் சந்தித்து பேசி ஒருவருக்கொரு வர் அளவளாவிக்கொள்ளுகின்றனரா என்று கவனிக்க விரும்பினன். ஸ்வர் ணத்தின் மனே நிலே மாறுபட்டிருக்கு மோவென யோசிப்பான். அவள் வரு கிற சமயம் மாப்பிள்ளை ரங்கன் இங்கு இருக்கின்றுன் என்பதை நினைத்தும் சந் தோஷித்தான். ஆனல் ஒரு விஷயம் மட்டும் மணியைப் பெரிதும் வாட்டியது. ஸ்வர்ணம் மாப்பிள்ளை ரங்கனை திரஸ் கரித்துவிட்டால், மேலும் ஸ்வர்ணத்தின் நடத்தை ஆட்சேபனைக்குரியது என்று சொல்லிவிட்டுப் போய்விட்டால் தன் தங்கை ஸ்வர்ணம் இந்தப் பெரிய உன் னத அந்தஸ்தில் புருஷனில்லா மங்கை யாகவல்லவோ காலங்கழிக்க நேரிடுமே என்று எண்ணி எங்கினன். பணமில் லாக்கஷ்டத்தால் தாய் தந்தையற்ற நிலே யில் இருந்த காலத்து தனதரிய நண்பன் முத்து தகப்பனர் தங்கள் இருவர்களை யும் ரட்சித்துப் போஷித்தார். ஸ்வர் ணத்தின் கலியாணத்தில் 'ராஜம்' என்று,எண்ணியே விவாகத்தைப் பெருந் தோரணையில் நடத்தினர். இப்படிக் கெல்லாம் நடந்திருக்க தறபோது எல்லா ஐசுவரியங்களையும் அனுபவிக்க வேண் டிய நிலேயில் ரங்கன் இவளது நடத் தையை சந்தேகிக்க நேரிடின், அன்றி புருஷனை அவள் செல்வச் செருக்கால் அதிக படிப்பில்லேயென்ருவது, உத்தி யோகமில்லே யென்ருவது நினைத்து திரஸ்கரித்துவிட்டால் என் செய்வது என்று நினைத்து எங்கினன். இது காறும் தெய்வம் நம்பக்கமிருந்து உதவி செய்திருக்க இனியும் விட்டுவிடுவரா என்று சொல்லி மனதை திடப்படுத்திக் கொண்டான். முத்துவும் மாப்பிள்ளை யும் வந்தவுடன் உள் ரகசியத்தை வெளி விடாமல் ராணி வருகிற விஷயத்தை மட்டும் தெரிவிப்போம் என்று தீர்மா னித்தவண்ணம் நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்தான்.

"மணி, மணி, கதவைத்திற" என்ற சத்தத்தைக் கேட்டு ராஜம் உடனே சென்று கதவைத் திறந்தாள்.

"என் இவ்வளவு நேரம்" என்ருன் மணி.

'எல்லாம் மாப்பிள்ளை ரங்கனுல்தான்' என்ருன் முத்து.

"என்ன, எங்கே, உன்னேயும் அழைத் துச் சென்ருன்" என்ருன் மணி.

இருவருமாக எந்தெந்தவிடங்களுக் குச் சென்ருர்களோ அவற்றைப்பற்றிய சகல விருத்தாந்தங்களையும் சுருங்கக் கூறி முடித்ததும், சின்னராணி மறு தினம் காலே வருவதாகத் தெரிவித் துள்ள ரெவிடெண்டு கடிதத்தை முத் துவிடமும் மாப்பிள்ளை ரங்கனிடமும் காண்பித்தான். ரங்கனுக்குண்டான சந்தோஷத்துக்கு அளவில்லே. முத்து சில நிமிஷம் யோசித்துவிட்டு "வருகி ருளே, எதற்கு என்று தெரிகிறதா"? என்று கேட்டான். ஒன்றும் தெரியா தவன்போல் "என்ன பார்த்துவிட்டுப் போகத்தானிருக்கும். எத்தனையோ ஜமீன்தார்கள் ஆபீஸில் என்னைப் பார்த் துவிட்டுச் செல்வது வழக்கம். இவளோ ஸ்திரீ ஜமீன்தாரணி. ஆபீஸுக்கு வந் தால் அங்கிருக்கும் பேர்வழிகள் சொல்ல வேண்டுவதில்லே. கண்டபடி வாய்க்கு வந்தபடி பேசத்தவாரம்பிப்பார்கள். அதற்கு இடங்கொடுக்கக்கூடாதென்று நினைத்துத்தான் வீட்டில் பார்த்துப் போக வருகிறதாக நான் நினைக்கிறேன்." என்ருன் மணி.

முத்து:—அன்று தர்பாரில் நாம் சந்தேகித்தோமே. ஒரு சமயம் அவள் என் தங்கையாக இருக்கலாகாதா.

மணி:—எனக்குமட்டும் சந்தேகந் தான். அவள் அவ்வளவு புத்திசாலியா?

ரெங்கன்:—என் உங்கள் தங்கையாக இருக்கக்கூடாதென்று நினைக்கவேண் டும்,

மணி:—(சில நிமிஷம் யோசித்து) அவள் என் தங்கையாக இருக்கமுடியாது என்பது சர்வ நிச்சயம்.

முத்து:—அதிருக்கட்டும் மணி, உனக்கு உன் இனத்தில் விவாகம் ஆகா திருந்தால் உனக்கு சந்தோஷம் அதிக மாகயிருந்திருக்குமல்லவா?

மணி:—ஆம். வேறு வகுப்புப் பெண்ணை, நான் மணந்து கொண்டிருந்தேனாகில் என் தேசத்துக்கு நான் செய்யக் கூடிய விசேஷ கைங்கரியத்தில் மிகச் சிறந்ததாக இருக்கும்.

முத்து:—நான் இனி விவாகம்செய்து கொள்ளுவதாயின் அங்ஙனமே செய்வேன்.

ரெங்கன்:—நான் என்னசொல்லிக் கொள்ளுவது. வைதீகப் பித்துகொண்ட என் தந்தையின் வார்த்தையை எப்போதும் மீறி நடந்தவனுக்கு தேச ஒற்றுமைக்கும் பிராம்மணசமூக ஒற்றுமைக்கும் அடிப்படையான இந்த இயக்கத்தின் தத்வத்தையும் நுட்பத்தையும் முன்னதாக அறியாமற்போனேனே. நாளை வருகிற ராணிக்குப் புருஷன் இல்லையென்று கூட நான் நினைக்கிறேன். என்னை அவள் விரும்பி மணந்து கொள்ளுவாளாயின் அதற்கும் நான் தயார்" என்று சொன்னதும்,

"முத்து" பார்த்தாயா முதலில் ஒருத்தியை உன்தங்கையை மணந்து கொண்ட முகூர்த்தம் அவள் இருக்கிற இடமே தெரியாமல் இருக்கிறது. சின்ன ராணியையும் கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமாம். இருக்கட்டும் ரெங்கா, (மனதுக்குள் புன்சிரிப்பு கொண்டு) உன் நிலைமை என்ன, அவள் இருக்கும் அந்தஸ்து என்ன, உனக்காவது படிப்பு அதிகமிருந்து பெரிய உத்யோகமாவது இருக்கிறதா. அதுதான் போகட்டும், சின்னராணிக்குத்தான் இன்னும் கலியாணமாகவில்லையென்பது உன் உத்தேசமா, கலியாணம் ஆகவில்லையென்று வைத்துக்கொண்டாலும் அவள் என்ன ஜாதியோ, எந்த வகுப்போ எங்ஙனம் மணக்கமுடியும் இதையெல்லாம் என் வீண் கனவு காண்கிறாய் என்றான் மணி.

"ரெங்கா அதெல்லாம் சாத்தியமா" என்றான் முத்து.

"என்னையே அவள் மணப்பதாக நேரிட்டால்" என்றான் ரங்கன்.

"நேரிட்டால் உனக்கு அதிர்ஷ்டந்தான்" என்றான் மணி.

"அவளும் உன்னை நேசித்து, நீயும் அவளை மணப்பதென்றால்" ரெங்கா நீதானே பிறகு அந்தஜமீனுக்கு அதிகாரி என்றான் முத்து.

"ராஜம், இலை போடலாம், அவர்கள் இருவரும் வந்து விட்டார்கள்" என்று மணி சொன்னதும், இரவு போஜனத்துக்கு ஏற்பாடாயிற்று. ஜோதிடவேடம் பூண்டு சின்னராணியைகண்டு பேசிய யாவும் ரங்கனுடைய ஞாபகத்துக்கு வந்தது. அவள்தான் தன் மனைவியென தீர்மானித்தான். தன் புருஷனுடைய ஞாபகத்திலேயே ஈடுபட்டவளாய் விளங்குவதையும், பரிசுத்தையாக காலங்கழிப்பதையும் உணர்ந்து "தன்னை எந்த நிமிஷம் புருஷன் என்று தீர்மானிக்கின்றாளோ அதேநிமிஷம் தன் சொற்படி நடப்பாள்" என்றும் தீர்மானித்துக் கொண்டான். அந்த சம்பவத்தைப்பற்றி மணியிடம் சொல்ல ரங்கன் விரும்பவில்லை. தனக்கு நற்காலம் சமீபிப்பதை நினைத்து நினைத்து சந்தோஷிப்பான். இலைகளும் போடப்பட்டு இரவு போஜனமும் முடிந்து தாம்பூலதாரண நிமித்தம் எல்லாரும் ஒன்று சேர்ந்து உட்கார்ந்து பற்பலவாறு சம்பாஷிக்கலானார்கள். சின்னராணி தன்னை ஒருசமயம் நேசிக்கக்கூடும் என்று எண்ணிக்கொண்டிருக்கும் ரங்கனை அனுப்பி பலதிறப்பட்ட பழவகைகளை வாங்கிவரச் சொன்னால் மறுக்காமல் போவான் என்ற எண்ணத்துடன்,

"ரங்கா, அவள் வேறு ஜாதியைச் சேர்ந்தவளாக இருந்தால் நீ அவளை மணப்பது நிச்சயந்தானா" என்றான் மணி.

"அதற்கென்ன சந்தேகம்" அவள்மட்டும் என்னை மணந்துகொள்ள சம்மதித்தால் போதும், ஏன்அவள்தான் என்—" என்று சொல்ல வாரம்பித்தவன் திடீரென மாற்றி "ஜாதி வித்தியாசம் எதற்கு ஒருசமூகத்துக்குள் பிளவுகள் இருப்பதை நான் வெறுக்கின்றேன்" என்றான் ரங்கன்.

"அவளை எந்தவகையாலும், அவள்மட்டும் இஷ்டப்படின், நீ மணந்து கொள்ளுவது நிச்சயந்தானே என்றான்" முத்து.

அதற்குச்சந்தேகம் சிறிதுமில்லையெனத் தெரிவித்து "தான் இரண்டொரு தினங்களுக்குமுன் அவள் தங்கியிருந்தவிடம் சென்றதாகவும், அவள் ஜோதிடப்பித்து கொண்டு ஜோதிடர்களைக்கண்டு பேச விரும்புவதாயும், அதுகாரணத்தால்தான் நாளைகாலை இங்கு ஒருஜோதிட சாஸ்திரி போல்வேஷம்தரித்து உட்காருவதாயும், அச்சமயம் அவளுடன் பேச அனுமதி கொடுக்கும் படியும்" மணியை ரங்கன் கேட்டான். "அதற்கென்ன அப்படியே செய்வோம்"என்று மணிபதிலிறுத்தான் சின்னராணிக்குப் பழங்கள் கொஞ்சம் வாங்கிவைத்தால் நல்லதல்லவா என்றான் மணி.

பரபரப்புடன் இப்பொழுது கடைகள் திறந்திருக்குமோ, திறந்திருக்குமாயின் நான்போய் வாங்கிவருகிறேன், என்று ரங்கன் வலுவில் சொல்ல ரங்கனிடம் மணி 10-ரூபாய் கொடுத்து அவனுக்கு இஷ்டமானபடி உயர்ந்த பழவகைகளை வாங்கிவரச்சொன்னான். ரங்கனும் மன சந்தோஷத்துடன் புறப்பட்டுச் சென்றான். ரூ 25-க்கு பழங்களை வாங்கிவரத்தீர்மானித்தான். வெகு அழகான ரோஜா புஷ்பஹாரம் ஒன்றையும் கிளி வைத்துக்கட்டிய அழகான செண்டு ஒன்றையும் வாங்கிவரத் தீர்மானித்தான். இவன் புறப்பட்டுச்சென்றதும்.

மணி:—முத்து நாளைவருகிற சின்ன ராணியை நீ எந்த வகையாலும் சந்தேகிக்கின்றாயா?

முத்து:-அவளைப்பார்த்தால் நம்மஸ்வர்ணத்தின்ஜாடை நன்றாகக் காட்டுகிறது. இப்போது விலையுயர்ந்த ஆடைகளையும் வைரநகைகளையும் போட்டுக்கொண்டிருப்பதால்தான் நன்றாக நமக்கு விளங்கவில்லை, நீ என்ன எப்படிநினைக்கின்றாய்.

மணி:-நானும் உன்மாதிரிதான் நினைக்கிறேன். பக்கத்து அறையில் உட்கார்ந்து சற்று இளைப்பாறிக்கொண்டிருந்த ராஜமும் திடீரென எழுந்தோடிவந்து "அண்ணா நானும் அன்று அவளை நம்ம ஸ்வர்ணமோ என்று சந்தேகித்ததும் உண்டு" என்றாள்.

முத்து:—ராஜம்சின்னராணிவந்ததும் உனக்கு அவள் ஸ்வர்ணம் என்று தெரிந்தாலுங்கூட நீ ஒன்றும் தெரியாதவள் போல் நடிக்கவேண்டும்.

அவள்தானாகவே வலுவில் என்ன ராஜம் என்றுகேட்கும்வரை தெரிந்தவளாக பாவித்துவிடாதே, அவள் இப்பொழுது ராணிஅந்தஸ்தில் இருப்பதால், இத்தனைக்கும் அவள் ஸ்வர்ணமாக இருந்தாலும், வெகு மரியாதையாக உபசரிக்கவேண்டியது

ராஜம்:—அப்படியே செய்கின்றேன் என்று சொல்லி சற்று தூரத்தில் ஒரு ஆசனத்தில் உட்கார்ந்தாள்.

மணி:—அவள் நடத்தையை நாம் சந்தேகிக்கமுடியுமா.

முத்து:—இதை ஆலோசிக்கு முன்னர் அவள் ஸ்வர்ணந்தானா வென்று நாம் தெரிந்துகொண்டல்லவா பின்னர் பேசவேண்டும். ஸ்வர்ணம் என்று கொண்டால்தான் என்ன. நடத்தையை ஏன் சந்தேகிக்கவேண்டும் என்கிறாய். சந்தேகிக்கக்கூடிய நடத்தையுடன் இருந்தால் அவள் ஏன் இங்கு வந்து பார்க்க வேண்டும்.

மணி:—ஜாமீன் விஷயமாக இருக்கலாம் அல்லவா.

முத்து:—அந்த ஜாமீன் ஸ்வர்ணபுரி அரசனது எல்லைக்குள் அல்லவா இருக்

கரூர் விலை போர்டு.

(திரு. பரிமணபல்லவராயர்.)

நமது வியாபாரத் தோழர்கள் "கரூர் விலை" என்பதைப்பற்றி நன்கு அறிந்தவர்கள். நாம் பார்க்கும் கடைகள் சிலவற்றில் "கரூர் விலை" என்ற போர்டுகள் பொதுஜனங்கள் கண்முன் தோன்றுமாறு தொங்கவிடப்பட்டிருப்பதும் எவரும் அறிந்தது. சில கடைகளில் போய் வேண்டிய பொருள்களைக் குறிப்பிட்டு விலை கேட்டு, கடைக்காரர்கள் விலை சொன்னபின் வாங்குபவர்கள் குறைத்துக் கேட்பின், அவர்கள் பொருள்களின் நயங்களை நவின்று விலை கரூர் என்றும், சொன்ன விலைக்கு குறைத்துக் கொடுப்பதில்லை யென்றும் வாங்குவோர் நம்பும்படி சொல்லி பொருள்களை வாங்கும்படி செய்து வியாபாரம் செய்கின்றனர். வேறு சில கடைகளில் "கரூர் விலை" என்ற போர்டு தொங்கவிடப்பட்டிருப்பினும், கடைக்காரர் விலை கூறியது பற்றி வாங்குவோர், விலை அதிகமாயிருப்பதாகக் கூறினால், உங்களுக்கு எவ்வளவுக்கு வேண்டும்? உங்களுக்கு என்ன விலை பிடித்திருக்கிறது என்று கடைக்காரர் கேட்கவும் செய்வதோடு, சொன்ன விலைக்குக் குறைத்துக் கொடுக்கவும் செய்கின்றார்கள். இவர்களின் "கரூர் விலை" போர்டின் நோக்கமென்ன பொருளென்ன மதிப்பென்ன என்பதே விளங்கவில்லை! பொருள்பல வாங்கும் அநுபவம் இல்லாதோர், அநுபவம்வாய்ந்த தமக்குத் தெரிந்த வேறு சிலரைக்கூட்டி வந்து வேண்டிய பொருளை வாங்குவதையும் எவரும் அறிவர். வியாபாரிகளையும் வழக்கத்தில் அறிந்து அறிமுகமான சிலர் வேறு மனிதர் உதவியில்லாமலே தனித்துச் சென்று பொருள்கள் வாங்குவதும் தெரிந்ததே. இது நம்பிக்கையைப் பொறுத்தது. வேறு சிலர் தம் சிறுவர்களை அனுப்பிப் பொருள்களை வாங்கிவரச் செய்கின்றனர். இது, பழகியவர்களுக்குள் ஏற்பட்ட நம்பிக்கை. இது வியாபாரிகள் சிறு பிள்ளைகளாயினும் சரியான விலைக்கு; சரியான பொருளைக் கொடுக்கும் நேர்மையான முறையாகும். இந்த நேர்மையான முறையைப் பல வியாபாரிகள் கைக் கொள்ளாததினாலேயே பல வியாபாரங்கள் அவர்களை விட்டு விலக நேரிடுகின்றது எனலாம். ஏனெனில், பொதுஜனங்களுக்குப் பல வியாபாரிகளிடம் நம்பிக்கை யில்லாமையேயாகும். இதனாலேயே பல வியாபாரிகள் வியாபாரங் குன்றி நஷ்டமடையக் காரணமாகு மவைகளில் ஒன்றெனலாம். இதுபற்றி, எம்முடைய அநுபவங்களில் இரண்டொன்றைக்கூறி இக்கட்டுரையை முடிக்கின்றோம்.

திருச்சி மளிகைக் கடையொன்றில் நாம் வருஷக்கணக்காகச் சாமான்கள் வாங்கிவருவது வழக்கம். இவ்வழக்கமான பழக்கத்தினால் கடைக்காரர்கள் நமக்கு நல்ல பொருள்களையே ஏற்பட்ட, தகுதியான, விலைக்குக் கொடுப்பதாகச்சொல்லுவார்கள். பொருள்களையும் நாம்கண்ணாற் பார்ப்பதில்லை. இந்த நம்பிக்கையின் காரணமாக, நாம் அதிகமாக நம்பும்படி சில சமயங்களில் பொருள்களை நம்மிடம் காட்டுவதும் உண்டு. இம்முறையில் நாம் ஒருசமயம் வாங்கிச் சென்ற மிளகாய்ப் பொட்டணங்களை வீட்டுக்கு வந்து அவிழ்த்துக் கொட்டிப் பார்க்கையில், பொட்டணங்களில் மேலே இருந்தவை நல்ல மிளகாயாகவும், உள்ளே இருந்தவையெல்லாம் வெண் குஷ்டம் போன்ற சாவி (வெளுத்த) மிளகாயாகவும் இருந்தன இப்படிப்பட்ட மோசக்காரர்களின் கடைகளுக்கு எந்தமதியீனனாவது இனி போவானா? நாம் அதிலிருந்து அக்கடையின் தோற்றத்தையாவது கண்ணாற் பார்ப்பதை அறவே ஒழித்தோம். அதன் அருகில் மறந்துங்கூடச் செல்வதில்லை. இது எவருக்கும் உரியவழக்கமேயாகும். மோசம் செய்தவர் இடம் எவர்தான் செல்வர்?

இன்னொருமுறை நாம் நமதுசிநேகிதரொருவருடன் திருச்சி கடைவீதியில் சென்று கொண்டிருந்தோம். நண்பர் ஒரு ஜவுளிக்கடைக்குச் சென்றார். அங்குள்ள வியாபாரியை நோக்கி ஓர் பட்டுப்புடவையைக்காட்டி அதன் விலையைக் கேட்டார். கடைக்காரர் ஏதோ ஒருவிலை சொன்னார். நமது நண்பரோ, பட்டுப் புடவைகளை நாங்கள் நிறுத்து வாங்குவது வழக்கம், இங்கு அப்படிக் கொடுப்பதில்லையா என்றார். அதற்குக்கடைக்காரர், அப்படி வழக்கமில்லை. ஆனால், உங்களுக்குஎன்ன விலைக்கு வேண்டும், அதைக் கேளுங்கள் என்றார். இந்தக் கடையிலும், தகத்தகாயமான கரூர் விலை போர்டும் தொங்கவிடப்பட்டிருந்ததுதான். எனவே, கரூர் விலைக்காரர்கள் வாங்குவோரின் அபிப்பிராய விலையைக் கேட்பது உசிதமா? வாங்கு வோர் குறைத்துக் கேட்பின், தாம் சொன்ன விலைக்குக் குறைத்துக் கொடுப்பவர்தானே! இதுதான் கரூர் விலையா? இப்படிப்பட்டவர்களின் கரூர் விலை (?) யில் நம்பிக்கை ஏற்படுவதெப்படி? இப்படிப்பட்ட வியாபாரிகள் சிலரால் இவ்விதம் நம்பிக்கையில்லாமல் போவதாலேயே, ஏமாந்தவர்களிடம் சரியான விலைக்குமேல் 2, 3, மடங்கு விலை அதிகமாகவாங்கி மோசம் செய்வதாலேயே வியாபாரக்குறைவும், மோசத்திற்கேற்ற நாசம் (நஷ்டம்) அடைவதும் கண்கூடு அன்றோ!

ஆகவே, சகோதர வியாபாரிகள், நவீனநாகரீக காலமாகிய இந்தஇருபதாம் நூற்றாண்டிலும் வியாபார முறையைக் கைகொள்ளாமல் பாமரத் தன்மையும், மோசகுணமும், நயவஞ்சகத்தன்மையும் கொண்டிருப்பதை அறவே விட்டு **"நன்மை கடைப்பிடி"** என்பதைக் கைக்கொண்டு மற்ற நாட்டாரைப்போல் முன்னேற்றமடைய பொது ஜனங்கள் வியாபாரிகளிடம் நம்பிக்கை கொண்டு தங்கள் சிறுவர் சிறுமிகளையும் வேலைக்காரர்களையும் அனுப்பி வாங்கி வரும் நம்பிக்கையை ஊட்டி முன்னேற்றமடையப் பெரிதும் வேண்டுகின்றோம்.

கிறது. அதற்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது.

மணி:—ஒரு சமயம் ஸ்வர்ணபுரி அரசன் அவளைக் கற்பழித்திருந்தால் என் செய்வது என்பது தான் என் கவலை.

முத்து:—அங்ஙனம் கடவுளின் திருவுளமாயின் நாம் என் செய்வது.

மணி:—மாப்பிள்ளை ரங்கன் ஏதாவது முறை தவறி நடந்தால் என் செய்வது. அவனை அடக்கிக்கொண்டு வரவேண்டுமே.

முத்து:—அவன்ஜோஸியராக வேஷம் தரிக்கப் போவதாயும் அவளிடம் ஏதோ குறி சொல்லப்போவதாயும் தெரிவிக்கிறானே. அவனுக்குத் தெரியாதா அவன் பொறுப்பு. ஏதாவது தப்புத் தண்டா செய்தால் அதன் பலனை அவன் அடைவான். வேண்டுமானால் அவனிடமும் குறிப்பாகச் சொல்லி விடுவது நல்லதல்லவா?

மணி:—அப்படியே செய்வோம் என்று பேசிக்கொண்டிருக்கும்போது ரங்கன் மார்கட்டில் என்னென்ன வித விதமான பழவகைகள் உண்டோ அவற்றையனைத்தையும் வாங்கி பல பழக்கூடைகளில் போட்டுக்கொண்டு வந்து சேர்ந்தான். நான் கொடுத்தது பத்து ரூபாய்தானே எதற்காக ஏராளமாக வாங்கி வந்தாய்" என்றான் மணி. அதற்குத் தன் கையிலும் பணம் இருந்ததென்றும் அதனையும் போட்டு வாங்கி வந்ததாயும், ராணிக்கு சந்தோஷம் உண்டாகுமாறு செய்யவேதான் இப்படிக்குச் செய்ததாயும் ரங்கன் பதில் சொன்னான். நாளை ராணி இங்கு வரும்போது நீ ஜோதிடராகவே நன்றாக நடிக்கவேண்டும் என்றான் முத்து. இதைக் கேட்டதும் புன் சிரிப்புகொண்டு அப்படியே செய்கிறேன் என்று சொல்லியதும் எல்லாரும் நித்திரைக்குச் சென்றார்கள்.

(தொடரும்.)

இந்திய வர்த்தகச்சங்க மகாநாடு.

(Indian Chambers Federation.)

இந்திய வியாபாரச் சங்க சம்மேளனம் மார்ச்சு மாத கடைசியில் நளினரஞ்சன சர்க்கார் தலைமையில் டெல்லியில் நடைபெற்றது. கீழ்கண்ட முக்கிய தீர்மானங்கள் நிறைவேறின.

நாணயச் செலாவணியும் தங்க ஏற்றுமதியும்.

"ரூபாய்க்கு 18 பென்ஸாக இப்போதுள்ள பரிவர்த்தனை விகிதம் இந்தியாவின் மேலான நன்மைக்கு மிகுந்த கேடு விளைவிக்கக்கூடியது. இதர தேசங்களின் நாணயவாரிகள் மதிப்புக்குறைந்து போனதால் நிலைமை இங்கு இன்னும் கேவலமாகிவிட்டது. நாணயமாற்று விகிதம் ஒரு நிதானத்துக்கு வரும்படி செய்ய ரூபாயின் மதிப்பைச் சீக்கிரத்தில் குறைப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்."

"1931 முதல் 171கோடிபொறுமான தங்கம் இந்தியாவிலிருந்து வடிகட்டப்பட்டு விட்டதைக்கண்டு இச்சபை பயப்படுகிறது. தேசத்தார் இதைப் பலமாக ஆட்சேபித்தும் கவர்ன்மெண்டார் அசிரத்தையாயிருப்பதுபற்றி இச்சபை வருத்தப்படுகிறது. இந்தியாவிலிருந்து தங்கம் இனி ஏற்றுமதியாகாமல் தடுக்க கவர்ன்மெண்டார் உடனே நடவடிக்கை எடுப்பதுடன், லண்டனில் தங்கத்தின் ஸ்டர்லிங் விகிதத்தை அனுசரித்து இந்தியாவிலும் தங்கம் வாங்க வேண்டுகிறது.

"பொதுஜன ஆக்ஷேபத்தைப்பொருட்படுத்தாமல் இந்திய கவர்ன்மெண்டார் வெள்ளி விற்பனையைத் தொடர்ந்து நடத்திவருவதை இச்சபை ஆக்ஷேபிக்கிறது. ஹில்டர் யங் சிபார்சுகள் இப்போது அமுலில் இல்லையாகையால் கவர்ன்மெண்டார் வெள்ளி விற்பனையை இனி நிறுத்திவிட வேண்டுகிறது. வெள்ளி இறக்குமதி வரியைக் குறைத்திருப்பதை இச்சபை வரவேற்கிறது. காலக்ரமத்தில் அவ்வரி பூராவாகஎடுத்துவிடப்படுமென்றும் நம்புகிறது.

"பின்னப்பட்டுப் போன நோட்டுகள் விஷயத்தில் இப்போதுள்ள விதிகளை மாற்றி 1927-க்கு முன் இருந்த நிலைமையை மீண்டும் ஏற்படுத்தக் கோருகின்றது.

தோல் ஏற்றுமதி வரி.

"மாட்டுத் தோல் ஏற்றுமதி வரியை அதிகரிக்கும்படி இடைவிடாமல் இச்சபை கேட்டு வந்தும், இந்தியா கவர்ன்மெண்டார் அதைப் பொருட்படுத்தாமல் அவ்வரியை ஒரேயடியாக எடுத்துவிட்டதை இச்சபை கண்டிக்கிறது.

இறக்குமதி வியாபாரம்.

"இந்தியாவில் உற்பத்தியாகும் தொழிற் பண்டங்களைப் போல் வித்தியாசம் தெரியாதபடி அன்னிய தேசங்களிலிருந்து(ஊர் பெயர் குறிப்பிடாமல்) இந்தியாவில் சாமான்கள் இறக்குமதியாவதை இந்தியா கவர்ன்மெண்டின் கவனத்திற்கு இச்சபை கொண்டு வர விரும்புகிறது. இறக்குமதியாகிற எல்லா சாமான்கள் மீதும் அவை உற்பத்தி செய்யப்படும் தேசத்தைக் குறிப்பிடும்படி சட்ட பூர்வமாக நிர்ப்பந்தம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறது.

பாங்கி வசதிகள்.

"பாங்கி வசதிகளை நாட்டில் பெருக்கத் திடமானதிட்டம் ஏற்படுத்தும் பொருட்டும் முக்கியமாக விவசாயம் கைத்தொழில்களில் ஈடுபட்டவர்களுக்கு உதவி புரியும் பொருட்டும் மத்திய பாங்கிக் கமிட்டி சிபார்சுகளை உடனே ஆலோசனைக் கெடுத்துக்கொள்ளும்படி இச்சபை வற்புறுத்துகிறது. இந்தியாவில் பொதுவாக பாங்கி ஸ்தாபனங்களை அபிவிருத்தி செய்யவும் ஜாயிண்ட் ஸ்டாக் பாங்கி வசதிகள் பெருகுவதற்கு வசதி செய்யவும் இச்சபை வற்புறுத்துகிறது."

நிலக்கரி கட்டணம்.

நிலக்கரி விஷயத்தில் ரயில்வேக் கட்டணத்துடன் ஸர்சார்ஜ் விதிப்பதை நிறுத்தி நிலக்கரித் தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு உதவி புரியத் தகுந்த நடவடிக்கைகளை கவர்ன்மெண்டார் எடுக்க வேண்டுகிறது. உற்பத்தி விஷயமாகச் சில நிர்பந்தங்கள் ஏற்படுத்துவதற்காக அத்தொழிலில் ஈடுபட்டவர்கள் தயாரித்துள்ள திட்டத்தையும் அங்கீகரிக்க வேண்டுகிறது.

ரயில்வே போர்டு அமைப்பு.

"புதிய அரசியல் அமைப்பதற்குமுன் சட்டபூர்வமாக ஒரு ரயில்வே போர்டையும் அமைத்து விடவேண்டுமென்றுகூறுவதை இச்சபை ஒப்புக்கொள்ளவில்லை. ஒரு சமயம் அப்படிப்பட்டசபை அவசியமென்று பட்டால்கூட, இந்தியரயில்வேகளை ஒழுங்கானபடி நிர்வகிக்கத் தகுந்ததோர் திட்டம் அமைக்க இந்திய சட்டசபைகளுக்குப் பூரா அதிகாரம் இருக்க வேண்டும். இந்திய ரயில்வேக்களை நிர்வகிக்கவேண்டிய முறை, பண விஷயம் இவை சம்பந்தமாக சட்டசபைகளின் அதிகாரங்களை எவ்விதத்திலும் பறிக்கக் கூடாது.

சர்க்கரை எதிர்வரியின் கண்டனம்.

"இந்தியா கவர்ன்மெண்டார் விதிக்க உத்தேசிக்கும் சர்க்கரை எதிர் வரியால் சர்க்கரைத் தொழிலில் ஈடுபட்டவர்களும் இத்தேசத்தாரும் அதிகமாக பாதிக்கப்படுவோர்களாகையால் அவ்வரியை இச்சபை கண்டிக்கிறது."

இந்தோ-ஜப்பானிய ஒப்பந்தம்.

"(1) பல கஷ்டங்களிடையே திறமையாகச் சமாளித்துக்கொண்டு இந்திய பிரதிநிதி கோஷ்டியும் அவர்களுக்கு ஆலோசனை சொல்லியவர்களும் இந்தோ ஜப்பானிய ஒப்பந்தம் செய்து முடித்ததுப்பற்றி அவர்களுடைய ஊழியத்தை இச்சபை பாராட்டுகின்றது. (2) பால்யப் பருவத்திலுள்ள சில இந்தியக் கைத்தொழில்களுக்குக் காப்பளிப்பதைஒட்டி இந்திய வர்த்தக சபைப் பிரதிநிதிகள் சொன்னயோசனைகளையும் ஐரோப்பிய வர்த்தக சபையினர் அதற்காதரவாயிருந்ததையும் இச்சபை பாராட்டுகிறது. (3) ஓர் அன்னிய கவர்ன்மெண்டுடன் நேராகப் பேச்சு வார்த்தை நடத்த இந்தியா கவர்ன்மெண்டுக்கு சந்தர்ப்பம் கிடைத்ததுபற்றி இச்சபை திருப்தியடைகிறது. ஆனால் ஒப்பந்தம் லண்டனில் கையெழுத்திடப்படவிருந்ததைக்கண்டு இச்சபை வருந்துகிறது. (4) இந்தோ ஜப்பானிய ஒப்பந்தத்தின் ஷரத்துகள் இந்தியப்பருத்தி நெசவு தொழிலின் தாராளமான வளர்ச்சிக்கு இடையூறாகவேயிருக்கும். இந்தியமூலப் பொருள்களைக்கொண்டு இந்தியாவிலேயே பண்டங்கள் செய்ய முடியும் போது, மூலப்பொருள்களை அன்னிய தேசத்திற்கனுப்பி, அன்னிய தேசங்களிலிருந்து தொழிற் பண்டங்களை இறக்குமதி செய்ய ஒப்பந்தம் பேசும் முறை ஒழுங்கான முறையல்ல. இந்திய வர்த்தகக் கைத்தொழில்அபிவிருத்திக்குஇது ஏற்ற முறையுமல்ல. பரஸ்பரம் வியாபார அபிவிர்த்தியை யுத்தேசித்து திடமான முறையில் ஒப்பந்தங்கள் செய்ய வேண்டுமேயன்றி நமது நாட்டு மூலப் பொருள் ஒன்றை விற்று, பர்த்திக்கு

அதே மூலப்பொருளைக்கொண்டு செய்யப்பட்ட சாமான்களை வாங்குவது ஒழுங்கான தர்மமாகாது. (5) இனிமேல் எந்த தேசத்துடனாவது வியாபார ஒப்பந்தம் செய்வதாயிருந்தால் மேற்கண்ட குறைகளுக்கு இடம் வைக்காமல் செய்ய வேண்டுகிறது. (6) அன்னிய தேச நாணயப் பரிவர்த்தனை இந்திய கைத்தொழிலின் நன்மை ஆகியவற்றைப் பொறுத்து அவசியமானால் ஒப்பந்தத்தைத் திருத்திக்கொள்ள இடம் விட்டிருப்பதைப்பற்றித்திருப்தியடைகிறது (7) முக்கியமான மூலப்பொருள்களை விற்பதற்கு பிறநாடுகளை நம்பிக்கொண்டு அவர்களோடு ஒப்பந்தம் செய்வதனால் ஏற்படும் பிரதிகூலங்களை யுத்தேசித்து இனி இந்தியப் பருத்தியை இந்தியாவிலேயே அதிகமாக உபயோகிக்க செய்யவும் நீண்டதண்டுப் பருத்தியை விளைவிக்கவும் உடனே முயற்சியெடுக்க வேண்டுகிறது: (8) மற்றெவரையும் விட இந்திய பருத்தியை அதிகமாக இந்திய ஆலைகளே வாங்கியுபயோகிப்பது பற்றி இச்சபை திருப்தியடைகிறது. அன்னியதேச மார்க்கட்டுகளை நம்பியிருக்கவேண்டிய அவசியமில்லாதபடி இன்னும் அதிகமாக இந்திய பருத்தியை இந்திய பருத்தி ஆலைகள் வாங்கியுபயோகிக்க முன்வரும்படி கேட்டுக்கொள்ளுகிறது."

சாமான் வாங்கும் முறை

இந்தியாவில் துறைமுக சபைகளுக்கு சாமான்வாங்கும் முறை அதிருப்திகரமாயிருப்பதாகவும், இந்தியா கவர்ன்மெண்டார் சாமான் வாங்குவதற்கு அனுஷ்டிக்கும் முறையை இவர்களும் இதர இலாகாக்களும் பின்பற்றும்படி ஆக்ஞாபிக்க வேண்டுமென்றும், புதிய ஹௌராபாலம் கட்டுவதற்குக் கூடிய மட்டும் இந்திய சாமான்களையே வாங்க வேண்டுமென்றும், இனி நடக்கக்கூடிய எந்த பெரியவேலைக்கும் இந்தியசாமான்களையே வாங்கி உபயோகப்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறது.

வருமானவரி.

"கவர்ன்மெண்டார் வருமானவரி விதிப்பதையொட்டிக் கையாளும்முறையைக்கண்டு இச்சபை மிகவும் அதிருப்தியடைகிறது. இந்திய வியாபார சமூகத்தின் கோரிக்கைகளை நிறைவேற்றக் கூடிய மாதிரியில் சட்டத்தைத் திருத்த வேண்டுகிறது; வருமானவரி சூபர்டாக்ஸ் சம்பந்தமாக ஸர்சார்ஜ் விதிப்பதை நீக்க வேண்டியதுடன் ரூ. 2000-க்குக்குறைந்த வருமானமுள்ளவர்களுக்கு வரி கூடாதென்றும், எந்த ஒரு வருஷத்திலாவது நஷ்டம் ஏற்பட்டால் அடுத்த 3 வருஷத்திற்கு அதைக் கணக்கில் காட்டி ஈடுசெய்துகொள்ள வசதியிருக்க வேண்டுமென்றும், வருமான வரி சம்பந்தமான அப்பீல்களை விசாரிக்க ஸ்வாதீனமுள்ள ஒருவிசாரணைசபை நியமிக்க வேண்டுமென்றும் இச்சபை தெரிவித்துக்கொள்ளுகிறது.

நிலக்கடலைக் கண்டனம்.

"நிலக்கடலை விஷயத்தில் பாரபட்சமாக நடந்துகொள்ள ரயில்வே மகாநாட்டுச் சங்கத்தார் தீர்மானித்திருப்பதைக் கண்டு இச்சபை வருந்துகிறது. இதர எண்ணை வித்துகளைப்போலவே இதையும் பாவித்து கட்டணம்விதிக்க வேண்டுகிறது."

பொருளாதார மந்தம்.

"தற்போதுள்ள பொருளாதார மந்தத்தை நீக்குவதற்கு இந்தியா கவர்ன்மெண்டார் யாதொரு நடவடிக்கையும் எடுக்காமலும், ஜனங்களின் கஷ்டத்தை நிவர்த்திக்க யாதொரு ஏற்பாடும் செய்யாமலும் இருந்து வருவதுபற்றி இச்சபை விசனிக்கிறது; இனியாவதுகவர்ன்மெண்டார் இந்த விஷயத்தில் சிரத்தையெடுத்து வர்த்தகப் பிரதிநிதிகளைக் கலந்துகொண்டு அவசியமான நடவடிக்கைகளை உடனே எடுத்துக்கொள்ள வேண்டுகிறது.

ஜப்பானியப் போட்டி

இந்தோ-ஜப்பானிய ஒப்பந்தத்தால் ஏற்பட்டசில வரிகளால் ஓரளவுபரிஹாரமேற்பட்டபோதிலும், பின்னல் தொழில், கண்ணாடித்தொழில் பீங்கான் தொழில் முதலிய பல சில்லரைத் தொழில்களுக்குப் போதிய காப்பு ஏற்படவில்லையென்றும், போதிய காப்பு அவசியம் அளிக்க வேண்டுகிறது.

கம்பெனி சட்டம்.

இந்தியக் கம்பெனிச் சட்டம்காலங் கடந்ததென்றும், ஜாயிண்ட்ஸ்டாக் கம்பெனிகளின் ஒழுங்கான நிர்வாகத்திற்கு ஏற்றமுறையில் அது இல்லையென்றும், மானேஜிங் ஏஜண்டுகள் சட்டத்திலுள்ள குறைகளைத் தங்களுக்கனுகூலமாகஉபயோகித்துக்கொள்ள இடமேற்படுகிறதென்றும், ஆகையால் சட்டத்தைத் திருத்திவிடவேண்டும்

கடலை வர்த்தகத்துக்கு ஆபத்து.

தென்னாற்காடுகடலைவியாபாரிகளின் சார்பாக இந்தியா சர்க்கார் வர்த்தக மெம்பருக்கு ஒரு விண்ணப்பம் அனுப்பப்பட்டுள்ளது. அதில் கூறப்பட்டிருப்பதாவது நிஜாம் சமஸ்தானப்போட்டியால் பலத்த கஷ்டத்திற்குள்ளா யிருக்கும்பிரிட்டிஷ் இந்தியத் தொழிலின் விவரத்தை நாங்கள் தங்களுக்கு எடுத்துக் கூற விரும்புகிறோம்.

கடலை வியாபாரமே தென்னாற்காட்டில் முக்கிய வியாபாரமென்பது தங்களுக்குத் தெரியாததல்லவே? மகா யுத்தத்திற்கு முன்புதெற்கேயுள்ள துறைமுகப்பட்டினங்களிலிருந்துசுமார் நான்கு லக்ஷம் டன் கடலை ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுவந்தது. உள்நாட்டிலுள்ள வடஇந்தியத் துறைமுகங்களுக்கும் ஒருடன் கடலெண்ணெய் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது அதிற் கப்பால் விலைவாசிகள்குறைந்துவிட்டன இவ்வியாபாரத்திற்கு இதுவரை வசதிகள் செய்து கொடுக்க சர்க்கார் முன் வரவில்லை. ஆகவேவெளியிடங்களுடன்நடைபெற்ற வியாபாரம் குறைந்த ஸ்தலமார்கெட்டுகளையே நம்பியிருக்க வேண்டியதாக ஏற்பட்டு விட்டது.

வியாபாரமந்தம்தீர்ந்தபின்னராயினும் நிலைமை சீர்படக்கூடுமென்று கருதி எங்களில் சிலர் இயந்திரங்களை நிறுவி தொழிற்சாலைகளை ஏற்பாடு செய்தோம். இது வெறுங்கனவாய் முடியுமென்று தோற்றுகிறது. நிஜாம்சமஸ்தானத்தில் வருடந்தோறும் ஒரு லக்ஷம் மூட்டை கடலை உற்பத்திசெய்யப்படுகிறது. அங்கு தொழிலும் வசதிகள் பெற்றிருக்கிறது. அத்தொழிலுக்கு சமஸ்தானத்தார் அளித்துள்ள பாதுகாப்பு பிரிட்டிஷ் இந்திய கடலைத்தொழிலுக்குப் பாதகத்தைவிளைவிக்கிறது. ரைச்சூரிலிருந்து மாத்திரம் வருடந்தோரும் சென்னைக்கு 12000 டன் கடலை ஏற்றுமதி செய்யப்படுகிறது.

ஆனால் சமீபத்தில் சமஸ்தானத்திலிருந்து ஏற்றுமதிசெய்யப்படும் கடலையின் மீது தீர்வை விதிக்கப்பட்டிருக்கிறது. கடலெண்ணெய்மாத்திரம் தீர்வையின்றி ஏற்றுமதி செய்யப்படுகிறது. சமஸ்தானத்திற்குள்ளாகக் கடலைக்குக்கிராக்கியேற்பட்டு விட்டது. இந்தமுறைகளால் பிரிட்டிஷ் இந்தியத்தொழில் பாதிக்கப்பட்டுவிட்டது. ஆகவே, நிஜாம் சர்க்கார் ஏற்றுமதித்தீர்வையை ரத்து செய்யும்படி செய்யவேண்டும், அல்லது பிரிட்டிஷ் இந்தியாவில் இறக்குமதியாகும் கடலெண்ணெய்க்கும் தீர்வைவிதிக்க ஏற்பாடுசெய்ய வேண்டும். ஏதாவதொரு வகையில் பரிகாரமளிக்கப்படாவிட்டால் சென்னை மாகாணக்கடலை வியாபாரம் மறைந்து விடும்.

கசாப்புக்கடை குபேரர்.

இங்கிலாந்தில், பெக்காம் என்னுமிடத்திலுள்ள ஒரு சிறு கசாப்புக்கடையில், சுமார் 50 வருடங்களுக்கு முன் வேலைபார்த்து வந்த சிறுவர், இன்று ஒரு பெரிய குபேரராயிருக்கிறார். இவரே ஸ்ரீ வில்லியம்சார்லஸ் ஆங்கிலிஸ் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் மாமிச வியாபாரஞ் செய்யும் வியாபாரிகளுக்குள் இவருக்கு இணை கிடையாது. ஏகாதிபத்தியமெங்கும் மாமிசம் சப்ளை செய்யும் ஒரு பெரிய கம்பெனியொன்றை ஏற்படுத்தியிருக்கிறார். அந்தக் கம்பெனியின் மூலதனம் 15,00,000 பொன் இதிலிருந்து இவருடைய வியாபாரம் எவ்வளவு பெரிய வியாபார மென்பதை அறிந்து கொள்ளலாம்.

வறுமை வாழ்க்கை

ஸ்ரீ வில்லியம் ஆங்கிலிஸ் 1865-ம் வருடம் கெண்ட் பிரதேசத்திலுள்ள ஹாக்கர்ஸ்ட் என்னுமிடத்தில் பிறந்தார் இவர் தந்தை ஒரு ஏழை தையர்காரர். இவரும் இப்பொழுது ஒரு தையர்காரராகவே இருந்திருப்பார். ஆனால் வில்லியம்சுக்கு தையல்வேலையில் பிரியமில்லை. உலகத்தின் போக்கையும், உலகில் எந்த விதமான வர்த்தகங்கள் நடைபெருகிறதென்பதையும் அறிய விரும்பினர் சிறு வயதிலேயே வறுமையால் படிப்பை நிறுத்தவேண்டியதாயிற்று. தையல்வேலை செய்ய இஷ்ட மின்றி தனது சிற்றப்பன் நடத்திவந்த கசாப்புக்கடையில் 2 வருடங்கள் வேலை செய்தார். அப்பொழுது இவருக்கு சுமார் 16 வயதிருக்கும். அக்காலத்தில் தான் இவருக்கு உலகத்தைச் சுற்றிப்பார்க்க ஆவல் எற்பட்டது. ஆகவேஒருசிறு கப்பலில் அமெரிக்காவுக்குப் புறப்பட்டார். இந்தக்கப்பல் கடல் அலையில் அகப்பட்டுத்திண்டாடியது. கப்பலே மூழ்கிவிடும்போலிருந்தது. கடலின்கொந்தளிப்பைக் கண்ட சிலர் மூளைகலங்கி கடலில் விழுந்து இறந்தார்கள். வில்லியம்சோ இந்த அலைகளைக்கண்டு அஞ்சவில்லை. தைரியமாகவே இருந்தார். கப்பல் பெரும் கஷ்டத்துடன் அமெரிக்கா சேர்ந்தது. அங்கு இறங்கியதும் வில்லியம்ஸ், சிக்காகோமுதலியஇடங்களுக்குச் சென்று அங்கு மாமிச வியாபாரம் எவ்வாறு செய்து வருகிறார்களென்பதை ஆராய்ந்தார். அமெரிக்காவில் சுமார் ஒரு வருடம் தங்கி யிருந்தபின் மீண்டும் தம் சொந்த ஊருக்குத் திரும்பினர். சிலமாதங்களில் அதாவது 1884-ம்வருடத்தில் அவர் மீண்டும் ஆஸ்திரேலியாவுக்குப் புறப்பட்டுச் சென்ருர்.

கசாப்புக்கடை வியாபாரம்

ஆஸ்திரேலியாவில் குயின்ஸ்லண்டு மாகாணத்திலுள்ள ராக் ஹாம்டன் என்னுமிடத்திற்கே இவர் முதன்முறைசென்ருர். அங்கிருந்து பிரிஸ்பேன் என்னுமிடஞ் சென்று அங்குள்ள கசாப்புக் கடையில் ஒரு வருடம் வேலை செய்தார். அதன் பின் சிட்னி, மெல் போர்ன் முதலியநகரங்களுக்குச் சென்று கசாப்புக் கடைகளிலேயே வேலைபார்த்து வந்தார். மெல் போர்ன் என்னுமிடத்தில் முதன் முதலில் தமக்குச் சொந்தமாக ஒரு கசாப்புக்கடையை ஆரம்பித்தார். அவர் கடையில் பலர் மாமிசம் வாங்கி வந்தார்கள். இன்னமும் 36 வருடங்களில் இதே வில்லியம்ஸ் ஒரு பெரிய கோடீஸ்வரராவாரென எவரும் நினைத்திருக்க மாட்டார்கள். இந்தக்கசாப்புக்கடையில் பெரிய வியாபாரஞ்செய்து அதை டப்ளியூ. ஆங்கிலிஸ் அண்டு கம்பெனி யென ஒரு கம்பெனியாகமாற்றினர். பலபங்காளிகளைச் சேர்த்தார். ஆரம்பத்தில் சுமார் 75000 பொன் மூலதனம் போட்டு ஆஸ்திரேலியா எங்கும் பல கசாப்புக்கடைகளை ஏற்படுத்தினர். அதன்பின் 1902-ம் வருடம் இதே கம்பெனியை இன்னமும் பெரிதாக்கினர். 1912-ம் வருடத்தில் இக்கம்பெனியை லிமிடெட் செய்தார். பெரும் மூலதனத்துடன் 1916-ம் வருடத்தில் இக்கம்பெனியை பிரிட்டிஷ் ஏகாதிபத்திய மெங்கும் ஏற்படுத்தினர். மாமிசம்சப்ளை செய்யும் உரிமையையும். பெற்ருர். ஏராளமான மாமிசத்தை உலகமெங்கும் ஏற்றுமதி செய்து வந்தார்.

பொதுஜன வாழ்க்கை

இவர் கசாப்புக்கடை வியாபாரத்துடன் நின்றுவிடவில்லை. அரசியலிலும் சம்பந்தப்பட்டார். 1912ம் வருடம் விக்டோரியா சட்டசபைக்கு அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆஸ்திரேலியா சர்க்காருக்கு இவர்மீது நல்ல நம்பிக்கைஇருந்துவந்தது. ஆகவே 1932 வருடம் ஒட்டாவாவில் நடந்த மகாநாட்டுக்கு இவரையே ஆஸ்திரேலியா பிரதி நிதியாக அனுப்பி வைத்தார்கள்.

வியாபார வாழ்க்கை

ஸ்ரீ. வில்லியம் ஆடம்பர வாழ்க்கையற்றவர். தமது வேலையை தாமே நேரில் சென்று கவனிப்பார். எந்தக்கஷ்டமான வேலைபார்க்கவும் பின் தங்கியது கிடையாது. ஆடு, மாடுகளை வாங்கி இவரே வெட்டி வந்தார். கசாப்புக்கடை வியாபார சம்பந்தமான சகல வேலைகளும் இவருக்குத் தெரியும் மெல் போர்னில் இவருக்கு நல்ல வீடொன்றிருந்ததும், இவர் வியாபாரஸ்தலத்திலேயே படுத்து றங்கி, அதிகாலையில் 5 மணிக்கெல்லாம் தமது வேலையை ஆரம்பித்து விடுவார். இவருக்கு 1919-ம் வருடம் விவாகமாயிற்று. அதுவரையில் தமது தங்கையை தமக்கு உதவிக்காக வைத்திருந்தார். அதிகாலையில் ஆடு, மாடுகளை விற்கும்இடத்திற்கு சென்று ஏராளமான ஆடுகளையும் மாடுகளையும் வாங்குவார். அவற்றை வெட்டி மாமிசத்தை சகலகசாப்புக்கடைகளுக்கும் பங்கிட்டுக்கொடுக்கும் வேலையை இவரே மேல் பார்த்துவந்தார். இவர்அடிக்கடி "கஷ்டப்பட்டு வேலைசெய்யவேண்டும். கஷ்டங்களை ஒரு நாளும் பொருட்படுத்தக்கூடாது" என்று கூறி வருவார் அதன் படி அவரே நடந்து வந்தார்.

சாதாரண வாழ்க்கை

இவர் சாதாரணவாழ்க்கையே நடத்தி வந்தார். ஆடம்பரம் இவருக்குப் பிடிக்காது. ஆடம்பரமாக ஆடை தரிக்க வேண்டுமென்ற ஆசையும் கிடையாது. ஒருமுறை அதாவது 1929-ம் வருடம் இவர் இங்கிலாந்துக்கு வந்தார். அப்பொழுது இவர் சாதாரண பழைய ஆடைகளையே தரித்திருந்தார். அக்காலத்தில் இவர் மனைவி தன் சினேகிதியிடம் ரகசியமாக என்ன சொன்னுள் தெரியுமா? என் கணவரை புது ஆடைகள் தைக்கும்படி தயவுசெய்து நீ தூண்டிவிடு. அவர் இப்பொழுது அணிந்திருக்கும் ஆடை பழையது. அதன் நிறம்கூட மாறிவிட்டது" என்ருர். இதுமட்டுமல்ல. சாதாரண மனிதரைப் போலவே நடந்துகொள்ளுவார். ஒரு முறை இவர் வாட்டர்லூ ஸ்டேஷனில் சில மிட்டாய்களை வாங்கி கையில் வைத்துக்கொண்டு தின்றுகொண்டிருந்தார். மற்ருெரு நாள் இவர் ஹாம்பர்க் துறைமுகத்தில் துறைமுக தொழிலாளர் வேலைசெய்வதைக் கவனித்துக் கொண்டிருந்தார். கையில் ஒரு ஆப்பிள் பழத்தை வைத்துக் கடித்துத் தின்றுகொண்டிருந்தார். இதிலிருந்து இவரது சாதாரண வாழ்க்கையை அறிந்து

கொள்ளலாம். பெரிய குபேரரென்ற ஆணவமோ, அன்றி தற்பெருமையோ கிடையாது. இவர் நேரத்தை வீணாகக் கழிப்பதில்லை. வேடிக்கைகளுக்கும விருந்துகளுக்கும் போகவேமாட்டார்.

காதல் மணம்

ஸ்ரீ வில்லியம், விரும்பினால் ஒரு பெரிய தனவந்தரின் குமாரத்தியை கல்யாணஞ்செய்திருக்கலாம். ஆனால் அவர் அதை விரும்பவில்லை. தமது கசாப்புக் கடைகளில் ஒன்றில் வேலை பார்த்துவந்த ஒரு சாதாரண பெண்மீது இவர் காதல்கொண்டார். அப்பெண் அழகில் சிறந்தவள். நல்ல அறிவுடையவள். ஆகவே அப்பெண்ணையே மணந்து கொண்டார். தற்போது இவருக்கு ஒரு மகளிருக்கிறாள். அவளும் நல்ல அழகுடையவள். தகப்பன் தன் குமாரத்தியை உயிருக்குயிராய் நேசித்து வருகிறார். ஆஸ்திரேலியாவெங்கும் இவருக்கு நல்ல செல்வாக்கு. மாமிசங்களை பிற நாடுகளுக்கு ஏற்றுமதிசெய்வதற்கெனப் பலவிடங்களில் ஸ்டோர்களை ஏற்படுத்தியிருக்கிறார். வருடமொன்றுக்கு இவர் ஸ்டோர்களில் சுமார் 46,000 ஆடுகளும், 12,27,000-செம்மறி ஆடுகளும பலியாகின்றன. இத்துடன் இவர் ஏராளமான முட்டைகளையும் ஏற்றுமதிசெய்து வருகிறார். வருடந்தோறும் 2-கோடிக்கு மேலதிகமான முட்டைகள் ஏற்றுமதியாகின்றன. ஸ்ரீ வில்லியம் நண்பர்களிடம் அதிக அன்பாய் நடந்துகொள்ளுவார். அவர் ஏழையாயிருந்தபோது, பழகிய நண்பர்களை இவர் மறந்தது கிடையாது. அவர்களுக்கு எப்பொழுதும் தம்மாலான உதவி செய்வதில் இவருக்குப் பரமானந்தம். ஒரு காலத்தில் கசாப்புக்கடைச் சிறுவராயிருந்த இவர், இன்று 20,00,000 பொன் உடைய குபேரராயிருக்கிறார்.

இரும்பு அபிவிருத்தி.

பிரிட்டிஷ் இரும்பு எஃகுத் தொழிலை விருத்திசெய்ய 5 வருஷத்திட்டமொன்று போடப் பட்டிருக்கிறது பிரிட்டிஷ் இரும்புத்தொழிலில் ஈடுபட்டவர்களின் சம்மேளனத்திற்குப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமெங்கும் வேண்டியவளவு ஆதிக்கம் இருந்துவரும். கவர்ன்மெண்டின் ஆதிக்கமின்றி அத்தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு பூரா அதிகாரமும் அளிக்கப்படும் அன்னிநாட்டு இரும்புச்சாமான்களின் இறக்குமதிஅளவைநிர்ணயிக்கவும், இழந்தமார்க்கட்டுகளைத் திரும்பக்கைபற்றவும், இதரகாரியங்கள் செய்யவும் சம்மேளனத்திற்கு உரிமையேற்படும்.

மதுரை கைத்தொழில் பொருட்காக்ஷி.

மதுரை, இராமநாதபுரம் வர்த்தகர் சங்கத்தினாதரவில் சேதுபதி ஹைஸ்கூலில் ஏற்பாடு செய்யப்பட்ட அகில இந்திய கைத்தொழில் சுதேசி பொருட்காக்ஷியை சென்னை கவர்ன்மெண்டு 2-வது மந்திரி திரு. பி. டி. ராஜன் சென்ற மாதம் 21வ திறந்து வைத்தார். வர்த்தகர் சங்கத்தலைவர் திரு. வி. எஸ். முத்துகிருஷ்ணய்யர், கனம். மந்திரிக்கு ஒரு வரவேற்புப்பத்திரம் வாசித்துக்கொடுத்தார். இதற்கு மந்திரி பதிலளிக்கையில்இவ்விதமான பொருட்காக்ஷிஒருவர்த்தக சங்கத்தினாதரவில் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது இதுவே முதல் தடவையென்றும், சாஸ்வதமாக இவ்வாறு நடைபெறுமென்று நம்புவதாயும், இவ்விதமான பொருட்காக்ஷிகளின் மூலமாக விவசாயம், கைத்தொழில் முதலியவைகள் இந்த ஜில்லாவிலும், மாகாணத்திலும் செழித்து ஓங்கி ஜனங்களுடைய கடன்பட்டிருக்கும் நிலைமையை ஒழிக்கக் கூடுமென்றும், சர்க்கார் விவசாயிகளினுடைய குறைகளை நீக்குவதற்காக அவர்களால் இயன்றமட்டும் உதவி செய்ய தயாராயிருப்பதாயும், மகாயுத்தத்திற்கப்பால் உலகிலுள்ள ஒவ்வொரு தேசமும் தங்கள் தங்கள் தேவைகளை தாங்களே கைத்தொழில்கள் மூலம் செய்துகொள்ள பிரயத்தனங்கள்செய்து வருவதாகவும், இதே மாதிரியாக இந்த மாகாணத்திலும் ஜனங்களுக்குத்தேவையான சாமான்களைத் தாங்களே உற்பத்தி செய்துகொள்ள ஏற்பாடுசெய்ய வேண்டியது அவசியமென்றும் இது விஷயத்தில் சர்க்காரும் கூட்டுறவு இலாகா, விவசாய இலாகாமுதலியவைகளிலுள்ள உத்யோகஸ்தர்கள் தங்களாலியன்ற உதவியை அளிக்க முன்வருவார்களென்றும் கூறினார். மேலும் மதுரையில் தற்போதிருக்கும் சர்க்கார் கைத்தொழில் பாடசாலைக்கு பதிலாக பம்பாயிலுள்ள விக்டோரியா ஜுபிலி டெக்னிகல் இன்ஸ்டியூட் போன்ற ஒரு டெக்னலஜிகல் கலாசாலையை ஸ்தாபனம் செய்யும் விஷயத்தை தாம் கைதொழில் இலாகா மந்திரியிடம் தெரிவிப்பதாயும் கூறிவிட்டு இறுதியில் பொது ஜனங்களுக்கு சர்க்காரோடு தகுந்த முறையில் ஒத்துழைத்தால்தான் தேசத்தின் க்ஷேமம் கைகூடுமென்றும், கூறிமுடித்தார். அப்பால் கனம். பி. டி ராஜன் பொருட்காக்ஷியைத் திறந்துவைத்தார்.

அநுபோக
கைத்தொழில் போதினி.

இதிலடங்கிய அநேக ரகசிய முறைகளைக்கொண்டு, ஏழைகளனைவரும் சொல்ப செலவில் வெகு சுலபமாய், சுக ஜீவனம் செய்யலாமென்பது உண்மை. வேண்டுவோர் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கே. என். எஸ். அண்டு கோ.,

அரிமளம். (புதுக்கோட்டை)

உலக விநோதங்கள்.
(World Industrial Wonders.)

அமெரிக்காவில் பணப்பைக் கடியாரமொன்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அக்கெடியாரத்திற்குச் சாவிகொடுக்க வேண்டுமாகில் ஒரு நாணயத்தைப் பைக்குள் போடவேண்டும்.

* * *

நடுப்பகல் 12 மணிக்குச் சிங்கம் கர்ஜிப்பதுபோலக் கர்ஜிக்கவும், காலை 6 மணிக்கும் மாலை 6 மணிக்கும் கோழி கூவுவதுபோலக் கூவவும் தகுந்த கடிகாரமொன்று சிசிலித்தீவின் தலைநகரான மெசினாவில் வைக்கப்பட்டிருக்கிறது.

* * *

பிரிட்டனில் தபால் ஆபீஸ் ஒன்றில் இயந்திர டெலிபோன் மனிதன் ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. நம்பர் கேட்பவர்களுக்கு அது உடனே நெம்பரை இணைத்துவிட்டு இணைத்துவிட்டதாகப் பதில் கூறுகிறதாம்.

* * *

ஜெர்மனியில் மரத்தூளிலிருந்து இப்போது சர்க்கரை செய்து வருகிறார்கள். அதற்கென பெரிய கைத்தொழிற்சாலையும் கட்டி இருக்கிறார்கள். கலிபோர்னியாவில் மரத்தூளை குழம்பாக்கி சிறு நூலாகத் திரித்து சாயமேற்றி உயர்ந்த பட்டு நூலாகச்செய்கிறார்கள். இந்தத் தூளிலிருந்தே இப்போது பல தேசங்களில் காகிதம் செய்து வருகிறார்கள். மரத் தூளிலிருந்து மேனாடுகளில் மிருகங்களுக்கு ஆகாரம் தயாரிக்கிறார்கள். மரத் தூள் பல சாமான்கள் கெட்டுப் போகாதபடி பாதுகாப்பதற்கு உபயோகப்படுகிறது, இவை எல்லாவற்றிலும் மரத் தூள் உபயோகத்தில் மிக்க அதிசயம், யாதெனில் அதிலிருந்து கண்ணாடிகள் செய்வதேயாகும். இந்தக் கண்ணாடிகள் சாதாரண கண்ணாடிகளைவிட உறுதியுடைய வைகளாகும்.

THE UNITED INDIA LIFE ASSURANCE COMPANY,

MADRAS.

Head Office:-MADRAS.

(Established in 1906.)

Trustee: Official Trustee of Madras.

Policies in force exceed Rupees Two Crores.
Total assets exceed Rupees Fifty Five Lakhs.
Annual Income exceeds Rupees Twelve Lakhs.

When selecting your life assurance company for a Policy it will pay you to come to this well established and most progressive life Office.

The Chief Distinguishing Features are :-

Complete and absolute safety of investments.
Prompt settlement of Claims.
Economical management.
Moderate premiums with substantial bonuses.
Efficient, sympathetic & prompt service to policyholders.

Wanted live agents and representatives in unrepresented areas in Madura & Trichinopoly districts.

Applications for further information should be addressed to:

The Branch Manager :—

UNITED INDIA ASSURANCE BUILDINGS,

31, NORTH CHITRAI STREET,

:: **MADURA.** ::

MYSORE PAGE

Concessions in Land Revenue.

As part of the policy of helping the raiyats to tide over the present period of abnormal agricultural depression, the Government of Mysore sanctioned certain special concessions in respect of land revenue assessment for the year 1933-34. The Revenue Commissioner on a further examination of the question opined that (i) although the prices of agricultural produce continued to be low it was unnecessary on this account to order any general suspension or remission of revenue, but that remissions of revenue might be granted when permissible under the rules and in tracts where there has been widespread failure of crops owing to excessive rains or other special reasons; and (ii) that there was no need to extend as a general rule, the time allowed for the payment of land revenue proper but that an exception might be made in favour of persons who have to make large payments under this head, where giving time would be to the advantage of the raiyat and in the interest of Government revenue and that Deputy Commissioners might be permitted to grant time at their discretion in such cases. The Government have accepted these recommendations and have requested the Revenue Commissioner to submit detailed proposals for orders regarding his suggestion that some latitude might be allowed in the collection of other demands such as loans, tank maintenance advances and irrigation contributions.

The Government have also approved of the proposals of the Revenue Commissioner to amplify or supplement in certain directions, the measures of relief sanctioned in the Government Order, dated 23rd December 1933, except in regard to the proposed exemption of applications for restoration of khate from stamp duty on which Government propose to issue separate orders in due course.

Under the concessions now sanctioned—

(*a*) Forfeiture of lands for arrears of land revenue will be confiined to those survey numbers in a khate on which the arrears are known to have accrued.

(*b*) Where lands are resumed to Government after forfeiture, and the khatedar or other person interested applies for the restoration of one more of the survey numbers in the khate paying the arrears due on such one or more survey numbers, the same might be permitted even if the arrears on the remaining survey numbers in the khate are not cleard. This concession will be necessarily restricted only to cases where a whole survey number or a sub division of a survey number is concerned & the arrears can be allocated to the different survey numbers in a khate. It cannot be applied (except in Taluks where Record of Rights has been introduced) to hissas of survey numbers.

(*c*) All Notice and Isthihar fees will be invariably remitted if the arrears are paid before the end of this official year whether the arrears relate to the current year or previous years, and whether the payment is made before or after the sale.

(*d*) The power of remitting process fees including Isthihar fees is delegated to the Amildars.

These concessions will be in force till the end of the current official year.

Income Policies.

The Government of Mysore have ordered that until further orders the rate of interest on "Annuities" or "Income Policies" be reduced to four per cent per annum.

Remissions.

The Government of Mysore have notified that the tracts forming the atchkats of certain tanks in the Bagepalli Taluk are entitled to remission of half wet assessment during the year 1933-34.

* * *

Rainfall in the Sorab Taluk was particularly heavy during the current year, exceeding the average for the past ten years and thirty years. Owing to excessive and continuous rains during the sowing season, sowing became impossible,&most of the lands were left uncultivated or got waterlogged. It is stated that a total extent of over 10,000 acres were affected in this manner. The Deputy Commissioner, Shimoga, who visited the affected area proposed, in view of these facts, and the urgent necessity for relief that half the wet assessment on the lands affected including half the Irrigation Cess amounting to about Rs. 23,579—10—0 may be remitted for the current year. This proposal which was supported by the Revenue Commissioner has been sanctioned by the Government, as a special case.

Yelandur Jaghir.

The Administration Report of the Yelandur Jaghir for the year 1932-33 has just been reviewed by the Government.

The Jaghir Taluk was ordered to be continued under Government management till the end of June 1935. Collections under current demand as also under arrears of previous years, were, it is observed, much poorer than in the previous year. This is said to have been due to the continuance during the year of the general adverse conditions existing during 1931-32 accentuated and made worse by a further fall in the price of food-stuffs and depression in silk trade which is the chief industry of the taluk. Government observe that special efforts are necessary to collect the arrears which are increasing year by year.

It is reported that there was some improvement in the working of the Village Panchayets in the Jaghir Taluk as compared with the previous year. Government express the hope that the improvement of irrigation works for which they have sanctioned a loan of Rs. 15,000 will be effected very early and will help to improve the condition of the taluk.

Proposals are under consideration for the proper conservation and improvement of the Jaghir Forests in consultation with the Chief Conservator of Forests. Government observe that early action should be taken for improving the Forest Revenue of the jaghir.

Compulsory Vaccination in rural parts

The Government of Mysore have notified that vaccination shall be compulsory in the rural parts of the Kadur District for a period of three years with effect from the 1st July 1934.

Oriental Government Security Life Assurance Company Ltd.

The Diamond Jubilee of an institution is certainly an epoch-making event in its history and it is particularly so in a country like India when we remember that, in the course of this country's industrial and commercial history, few companies have reached the sixtieth year of their existence. It is, therefore, a matter for public jubilation that the Oriental, which is the oldest proprietory Life Office in India and the largest and most popular company in the country, celebrates its Diamond Jubilee on the 5th May 1934.

Started in 1874 with a strong Board of Directors predominantly Indian and composed of prominent Businessmen of all communities, the Company has attained phenomenal success in the Indian Insurance world. The Funds of the Company amount to about Rs. 15 crores and its New Business Rs. 48 crores. The Company's annual income is about Rs. 3½ crores and the Company has so far paid by way of claims over Rs. 15 crores. It counts over 5000 Representatives both in this country and abroad and the amount of annual commission paid to them annually exceeds Rs. 18 lakhs. The unique position, which this company occupies, will be evident from the fact that about a third of the total life insurance in force in India is held by the Oriental and it has, therefore, come to be popularly known as India's Greatest Life Office. The Manager of this mighty Insurance Institution is Mr. H. Edwin Jones, who enjoys a high reputation for organising capacity and untiring devotion to the interests of the Company.

